Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 18 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 13 (02.07.2004) வெள்ளிக்கிழமை இதழ் :273

யாழ் நகரில்
பாடசாலை மாணவர்களுக்கும், அலுவலக உத்தியோகஸ்தர்களுக்கும் ஏற்ற
SILVER SHIELD SOCKS
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் T.P: 222 5392

# கருணாவுக்கு உதவி வழங்குமாறு அரசு அங்கீகாரம் அளிக்கவில்லை!

## சொல்ஹெய்மிடம் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)





**நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் – ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேற்றுக் காலை சந்தித்து சமாதான முயற்சிகள் குறித்து விரிவான பேச்சுக்களை நடத்தினார். ஜனாதிபதி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.**

இந்தச் சந்திப்பின்போது தனது கிளிநொச்சி விஜயம் தொடர்பாகவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்புப் பற்றியும் எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு எடுத்துக் கூறினார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள இராணுவத்தினை கருணா அணியினருக்கு உதவுமாறு அரசு அங்கீகாரம் வழங்கியதாக விடுதலைப் புலிகளால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை ஜனாதிபதி சந்திரிகா இந்தச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டைக்கு சென்ற எழிலன் படையினரால் தடுப்பு!

(திருகோணமலை)

திருகோணமலை புல்மோட்டைப் பகுதிக்கு அரசியல் பணிக்காகச் சென்ற திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் மற்றும் நிர்வாகப் பொறுப்பாளர் மலரோன் ஆகியோர் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பியனுப்பப்பட்டனர்.

இந்தச்சம்பவம் நேற்றுப் பகல் 11.45 மணியளவில் இடம்பெற்றது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

புல்மோட்டை யான் ஓயா ஆற்றைக் கடந்து படகுப்பாதையூடாகச் சென்ற புலிகளின் அரசியற்துறை போராளிகளை யான் ஓயாப் பகுதியிலிருந்த கடற்படையினர் தடுக்காத போதும், மறு கரையிலிருந்த அபயபுர படைமுகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

புல்மோட்டைப் பகுதியிலுள்ள முஸ்லிம் பிரதிநிதிகளின் வேண்டுகோளின் பேரிலேயே எழிலன் தலைமையிலான குழுவினர் சென்ற வேளையிலேயே படையினர் இவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

தமது அரசியற் செயற்பாடுகளுக்காக மாவட்டத்தின் எப்பகுதிக்கும் செல்ல அனுமதியுண்டெனவும், எனவே தம்மைத் தடுப்பது பிழையெனவும் எழிலன் படையினருக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பெரும்பான்மை பலம் இருந்தால் அரசை அமைத்துக் காட்டுங்கள்!

## எதிர்க்கட்சிகளுக்கு அரசு சவால்

(கொழும்பு)

**நாடாளுமன்றத்தில் தம்மிடம் பெரும்பான்மை பலம் இருப்பதாகக் கூறிக்கொள்ளும் எதிர்க்கட்சிகள் - முடிந்தால் அரசாங்கத்தை நிறுவிப் பார்க்கட்டும் என்று அமைச்சர் அனுர குமார திஸநாயக்க சவால் விடுத்துள்ளார்.**

**அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இந்தச் சவாலை விடுத்தார்.**

தமக்கு 114 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருக்கின்றதென எதிர்கட்சி கூறுவது எவ்விதத்திலும் ஆதாரமற்றதாகும்.

அத்துடன், இந்த 114 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டதாக தெரிவிக்கப்படும் இந்த ஆவணம் மக்களைத் தவறான வழியில் இட்டுச் செல்லும் ஒரு போலி ஆவணமாகும். அரசாங்கம் ஸ்திரமற்ற நிலையில் இருப்பதாக தெரிவிக்கும் முகமாக நிறுவப்பட்ட கூட்டுக்கட்சிகளின் ஒரு முயற்சியாகும்.

இவர்களால் அரசாங்கம் ஒன்றை நிறுவ முடியாது அவ்வாறெனில் அரசாங்கம் ஒன்றை நிறுவுமாறு எதிர்கட்சித்தலைவர் ரணிலுக்கு நாம் சவால் விடுக்கின்றோம்.

அவ்வாறு எதிர்க் கட்சியினர் அரசாங்கத்தை அமைத்தால் நாம் எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்வோம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வேலையற்ற பட்டதாரிகளுக்கு இருவாரங்களுக்குள் நியமனம்

### அமைச்சரவைப் பேச்சாளர் மங்களசமரவீர

(கொழும்பு)

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி தெரிவு செய்யப்பட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் அடுத்த இரண்டு வார காலப்பகுதிக்குள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை வெளியிடும் செயதியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு குறிப்பிட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 17 ஆவது இராணுவத் தளபதியாக கொட்டேகொட பதவியேற்றார்!

(கொழும்பு)

நாட்டின் பதினேழாவது இராணுவத் தளபதியாக லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட இராணுவத் தலைமையகத்தில் நேற்று உத்தியோக பூர்வமாக தனது பதவியை ஏற்றுக்கொண்டார்.

நேற்றுக் காலை இராணுவத் தலைமையகத்துக்கு வந்த லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொடவுக்கு இலகு காலாட்படை பிரிவினர் அணிவகுப்பு மரியாதை அளித்தனர்.

பின்னர் இவரை இராணுவத் தலைமை அதிகாரி சூல செனவிரத்ன வரவேற்று அழைத்துச் சென்றார். அலுவலகத்தில் இடம்பெற்ற சம்பிரதாயபூர்வ நிகழ்வுகளை அடுத்து சாந்த கொட்டேகொட தனது பதவியை பொறுப்பேற்றுக்கொண்டார்.



இதன் பின்னர் இராணுவத் தலைமையகத்தில் கூடியிருந்த அதிகாரிகள் மற்றும் படையினர் மத்தியில் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட உரையாற்றினார்.

இந்தப் பதவியேற்பு நிகழ் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவுக்கு உதவியதான குற்றச்சாட்டை நிராகரித்தார் புதிய இராணுவத்தளபதி!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்கு இராணுவம் உதவி வழங்கியதான குற்றச்சாட்டுக்களை புதிய இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட நிராகரித்தார்.

இராணுவத் தலைமையகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற புதிய இராணுவத் தளபதி பதவியேற்பு நிகழ்வின் பின்னர், செய்தியாளர் மாநாடு ஒன்றினை நடத்தினார். இதில் பேசும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகள் அமைப்பில் கருணா விவகாரத்தால் ஏற்பட்ட நெருக்கடி சமாதான முயற்சிகளை மேலும் கடினமாக்கும்.

புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்கு இராணுவத் தரப்பு உதவியது என்று விடுதலைப்புலிகள் நம்புவார்களேயானால



இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்டு வந்த நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளைப் பாதிப்பதாக அமையும்.

இப்போது கருணா எங்கே இருக்கிறார்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# மல்லாகத்தில் மக்கள் வங்கியின் நீடித்த கருமபீடம் திறப்பு விழா!

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் காங்கேசன் துறைக் கிளையின் கருமபீட திறப்பு விழா நேற்று மல்லாகச் சந்திக்கு அண்மையாக, வங்கியின் முகாமை யாளர் பொன் கணேசமூர்த்தி தலை மையில் இடம் பெற்றது.

இந்தநிகழ்வின் ஆரம்ப நிகழ் வாக முதன்மை விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள் மல்லாகம் பழம்பதி விநாயகர் தேவஸ்தான முன்றலில் இருந்து, மல்லாகம் மகா வித்தியாலய மாணவர்களின் பான்ட வாத்திய இசையுடன் மக்கள் வங் கிக் கட்டடத்திற்கு அழைத்து வரப் பட்டனர். இங்கு முதன்மை விருந் தினர் வலி.வடக்கு பிரதேச செய லர் கலாநிதி.க.குணராஜா மங்கள விளக்கினை ஏற்றி நிகழ்வை அரம் பித்து வைத்தார்.

பழம்பதி விநாயகர் ஆலயக் குருக்கள், மல்லாகம் பங்குத்தந்தை ஆகியோர் ஆசியுரை வழங்கினர். இதனைத்தொடர்ந்து பெயர்ப்பலகை யையும், மண்டபத்தையும் முதன்மை விருந்தினர் கலாநிதி க.குணராஜா திறந்துவைத்தார்.

இதனைத்தொடர்ந்து அங்கு மக் கள் தமது புதிய கணக்குகளை ஆரம்பித்தனர். இந்தநிகழ்வில், வட வலய மக்கள் வங்கி உதவிப்பொது முகாமையாளர் சி.இளம்பிறைநாதன், மல்லாகம் மகா வித்தியாலய அதி பர் மா.நாகேந்திரசீலன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகா ராசா, யாழ்.வன்னி மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் க.ஆனந்த ராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

## விருதி கையளிப்பு

யாழ் மருத்துவபீட 21 ஆவது அணியின் முதலாம் பிரிவு மாணவர் கள், கொமர்ஷல் வங்கி - சுன்னா கம் கிளையின் அனுசரணையுடன் புனரமைப்புச் செய்த தெல்லிப்பழை மனநோயாளர் விடுதியின் ஒருபகுதி நாளை காலை 10.00 மணிக்கு மேற் படி கொமர்ஷல் வங்கி முகாமையா ளரினால் வைத்தியசாலை நிர்வா கத்தினிடம் கையளிக்கப்படவுள்ளது.

# சிறப்பாக நடைபெற்ற நயினை ரதோற்சவம்

சரித்திரப் பிரசித்தி பெற்ற நயி னாதீவு நாகபூஷணி அம்மன் ரதோற் சவ திருவிழா - பெருமளவு பக்தர் கள் மத்தியில் பக்தி பூர்வமாக நேற் றுக்காலை 9.30 மணிக்கு இடம்பெற் றது.

ரதத்தில் எழுந்தருளும் அம்மா ளின் ஆசிபெறவென நேற்று முன் தினம் மதியம் தொடக்கம் பெருந் திரளான பக்தர்கள் பல பாகங்களி லும் இருந்து வந்து தங்கி நின்றனர். நேற்றுக் காலை 6 மணி முதல் வெளியிடங்களிலிருந்து பெருந்திர ளான பக்தர்கள் நயினாதீவில் வந்து குவிந்தனர்.

யாழ்.நகரில் இருந்தும், குறிகாட்டு வானில் இருந்தும் தனியார், அரச பேருந்து சேவைகள் சீரான முறை யில் மேற்கொள்ளப்பட்டதுடன், குறி காட்டுவான் நயினாதீவு இடையி லான படகுப் போக்குவரத்து சேவை யும் சீராக இடம்பெற்றது.

பக்தர்களது நலன் மிகவும் சிறப் பாகப் பேணப்பட்டதுடன், ஆலய வளாகத்தில் தொண்டர் அமைப்புக் களின் சேவைகளும் சிறப்பாக மேற் கொள்ளப்பட்டது.

பக்தர்கள் எந்தவித இடையூறு மின்றி வழிபாடு நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (113)

## பழைய மாணவர் சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கலாநிதி ஆ.தியாக ராசா மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் இன்று மு.ப. 10.00 மணிக்கு பண்டிதர் மு. சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது

இந்தக்கூட்டத்தில் பழைய மாண வர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி வேண்டுகோள் விடுக் கப்பட்டுள்ளது.

## நீதிமன்றத்தை அவமதித்தவருக்கு தண்டம்


நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்ட நபர் ஒருவ ருக்கு ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்த நீதிவான் உத்தரவிட்டார்.


இந்தச் சம்பவம் நேற்று யாழ் நீதிமன்றில் இடம் பெற்றது.

அரியாலை சோமசுந்தரம் வீதியைச் சேர்ந்த ஒருவருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, மது போதையில் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் நபருக்கு ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் 5000 ரூபா ஆட்பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

## நயினை நாகபூஷணி அம்மனின் நேற்றைய தேர்உற்சவக் காட்சிகள்





படங்கள்: கண்ணன்

## சாவகச்சேரியில் கரும்புலிகள் தின ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 5 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள கரும்புலி கள் தின நிகழ்வை முன்னிட்டு தென்மராட்சியில் பல்வேறு பகுதி களிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டுள்ளதுடன் பதாகைகளும் கட்டப்பட்டுள்ளன.

சாவகச்சேரி, கொடிகாமம், சங் கத்தானை, அரசடி போன்ற பகுதி களிலே இவ்வாறு பதாகைகள் கட் டப்பட்டுள்ளன.


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

காரைநகரைச் சேர்ந்த சுந்தரேஸ் வரன் தவலோசனா என்பவரது தேசிய அடையாள அட்டையும், சிறு தொகைப்பணமும் 28.06.2004 அன்று இலக்கம் 782 பஸ்ஸினுள் தொலைந் துவிட்டது. கண்டெடுத்தவர்கள்: 021-2225281 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் அல்லது காரைநகரில், லிங்கம் தொலைத் தொடர்பு நிலையத்தில் ஒப்படைக்க வும். C/2727

### விற்பனைக்கு

காரைநகரில் பிரதான வீதியில் 4 பரப்புக்காணியில் - மாடிக்கட்டட மும், 1500 சதுர அடி பரப்பளவில் வீடு அமைக்கக்கூடிய இடமும் விற் பனைக்குண்டு. தொடர்புகட்கு : லிங் கம் தொலைத்தொடர்பு நிலையம், காரைநகர். C/2728

சிவமயம்

'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'

சிவபூமி பாடசாலை

(சிறுவர் மனவிருத்திப் பாடசாலை)

திறப்புவிழா அழைப்பிதழ்

காலம்:

02.07.2004 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு

இடம்:

சிவபூமி பாடசாலை

அரசடிப் பிள்ளையார் வீதி,

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தலைமை

செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள்

(தலைவர், சிவபூமி அறக்கட்டளை)

பிரதம விருந்தினர்

சிவத்தமிழ்ச்செல்வி. கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P அவர்கள்

(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை)

கௌரவ விருந்தினர்

திருமிகு.ம.ஜெயசீலன்

(இலண்டன்)

வாழ்த்துரை

பேராசிரியர் சு.மோகனதாஸ்

(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

உயர்திரு.இ.த.விக்னராஜா

(யாழ்.மாவட்ட நீதிபதி)

உயர்திரு.சி.இளம்பரிதி

(பொறுப்பாளர், யாழ்.மாவட்ட அரசியற்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள்)

பேராசிரியர் அ.சண்முகதாஸ்

(தலைவர், கல்வி மேம்பாட்டுப் பேரவை, யாழ்.மாவட்டம்)

வைத்திய கலாநிதி கா.சிவபாலன்

(பீடாதிபதி, மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

பேராசிரியர் தயாசோமசுந்தரம்

(தலைவர், உளமருத்துவத்துறை மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

கலாநிதி.தி.கமலநாதன்

(பீடாதிபதி, தேசிய கல்வியியல் கல்லூரி, யாழ்ப்பாணம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

நிர்வாகசபை, சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில். (இ)


## செய்தி திருத்தம்

நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபம் கீழைத்தேய, மேலைத் தேய சங்கீத நிகழ்ச்சிகளுக்கு எப் போதும் ஆதரவாகச் செயற்படும் என்றும்,

இங்கு எந்த கலாசார சீரழிவு நிகழ்வுகளும் நடத்தப்படவில்லை என்றும் திவ்ய ஜீவன சங்க நிர்வா கிகள் அறிவித்துள்ளனர்.


ராஜா யாழ்ப்பாணம்.

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க

விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த

கில்லி



காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30 (பு.நே)

நாளை முதல் பேரழகன்

(சி-2623)

நிறஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், தேவயானி நடித்த

மகாபிரபு

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00,(பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே)

EHTREMITIEH (சி-2621)

நாகம்ஸ் சுன்னாகம்

மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்

அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க

ரஜினி, சௌந்தர்யா, ரம்யா கிருஷ்ணன் நடித்த

படையப்பா

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

புதுக்கடை திறப்பு விழா

நிகழும் தாரண வருஷம் ஆனி மாதம் 19 ஆம் நாள்

[02.07.2004] வெள்ளிக்கிழமை காலை இன்று

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

வாணி விலாஸ்



என்னும் புதுக்கடையினை ஆரம்பிக்கவுள்ளோம்

என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன்

தெரிவித்துக்கொள்கின்றோம்.



வெளிநாட்டு, உள்நாட்டு உணவுவகைகள், குளிர்பானங்கள், சிறுண்டிகள் என்பவற்றுடன், உங்கள் குடும்பத்தில் நடைபெறும் சகல நிகழ்வுகளுக்கும் ஓடருக்கு உடனுக்குடன் சகலவிதமான உணவு வகைகளும் தயாரித்து வழங்கப்படும்.

76, கே.கே.எஸ். வீதி

சுன்னாகம்.

உரிமையாளர்.மனோகரன் திபாகரன்

(சி/2718)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்கினால் முழு இலங்கையே தமிழீழ ராஜ்ஜியமாக மாறுமாம்!

## எல்லாவல மேதானந்த தேரர் கூறுகிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்குவதன் மூலம் இந்த நாட்டின் பயங்கரவாதம் முற்றுப்பெறாது, மாறாக அது இலங்கையை தமிழீழ ராஜ்ஜியமாக மாற்றுவதற்கான வழியை ஏற்படுத்தும் ஒன்றே என எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

காலியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இன்று அதிஉச்ச பலம் வாய்ந்த ஒரு அமைப்பாக மாறியுள்ளது. ஆனால், எமது இராணுவத்துக்கு நேர்மையான அரசியல் தலைவர்கள் இல்லை. சமாதானம் என்ற ஒன்றைக் கொண்டுவந்து அரசியற் கட்சிகள், எமது இராணுவத்தின் பலத்தை வெளியில் காட்டிவிட்டன.

இன்று விடுதலைப்புலிகள் அமைப்பு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கூட தங்களது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

பிரபாகரனுக்கும் - கருணாவுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றுவருவதாக அரசு கூறுகிறது. நாம் இதனை நம்பவில்லை. கருணாவை கொழும்புக்குக் கொண்டு வருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைத்தனர்.

இந்த நாட்டின் பெரும்பான்மை முன்னேற்றத்தைக் கவனித்துக் கொண்டிருக்கும் தலைவர் என்றால், கருணா - பிரபாகரன் மோதல் உண்மையென்றால், கருணாவுக்கு ஆதரவு வழங்கி, பிரபாகரனைத் தோற்கடிக்கவேண்டும். மாறாக இரண்டு பிரதான கட்சிகளுமே பிரபாகரனை வீழ்ந்து வணங்குகின்றன. எனக் கூறினார்.

# தென்கிழக்கு பல்கலைக்கு இந்தியத் தூதரகம் நிதியுதவி!

(கொழும்பு)

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞான தொழில்நுட்ப பீடத்தினை அமைப்பதற்கு இந்திய அரசாங்கம் நிதியுதவியை வழங்கவுள்ளது.

அத்துடன், சம்மாந்துறையில் அமைந்துள்ள கரையோரப் பிராந்திய விவசாய நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கும் இந்திய அரசாங்கம் நிதியுதவி வழங்கவுள்ளது.

இது தொடர்பான உயர் மட்டக் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போது, கருத்துத் தெரிவித்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென்-

இந்தியாவின் பிரதான பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அபிவிருத்தி செய்யப்படும்.

கிழக்கு அபிவிருத்தி உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் எம்.ஐ.அன்வர் இஸ்மாயிலின் அழைப்புக்கு இணங்க இந்தியத் தொழில்சார் நிபுணத்துவம் வாய்ந்த குழு ஒன்று தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம்செய்யவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிறிமா நிறுவனம் கேட்ட தொகையை வழங்குவதற்கு அரசாங்கம் இணக்கம்!

அரசாங்கத்துக்கும் - பிறிமா நிறுவனத்துக்கும் இடையே ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலையைத் தீர்க்கும் பொருட்டு பிறிமா நிறுவனம் கேட்டிருந்த தொகையைச் செலுத்துவதற்கு அரசாங்கம் உடன்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்த செய்திக் குறிப்பு தெரிவித்தது.

உலக வர்த்தக சந்தையின் விலைக்கு குறைவாக மாவினை சகாய விலைக்கு வழங்கியதன் காரணமாக கடந்த பெப்ரவரி, மார்ச் மாதங்களில் தாங்கள் பொறுப்பேற்க நேர்ந்த செலவான 48 கோடி 80 லட்சம் ரூபாவினை வழங்குமாறு பிறிமா நிறுவனம் அரசிடம் கோரியிருந்தது.

அதோடு தொடர்புடைய கணக்குகளைச் சமர்ப்பிக்குமாறு பிறிமா நிறுவனத்தை வர்த்தக நுகர்வோர்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கோரியிருந்தார். இதுதொடர்பான உடன்பாட்டிற்கு வருவதற்கு முடியாமலிருநததமையால் பிறிமா நிறுவனத்துக்கும், அரசுக்கும சிக்கலான நிலை தோன்றியிருந்தது.

சிங்கப்பூரில் பதிவுசெய்யப்பட்ட பிறிமா நிறுவனத்துடனான இந்தப் பிரச்சினை குறித்து கடந்தவாரம் உத்தியோகபூர்வ விஜயமாக கொழும்புவந்த சிங்கப்பூர் பிரதமர், ஜனாதிபதியிடம் இது தொடர்பாக கேட்டறிந்தார்.

எவ்வாறாயினும் பிறிமா நிறுவனத்துக்கு வழங்க வேண்டிய தொகையை அரசாங்கம் தவணை முறையில் செலுத்த உடன்பட்டுள்ளதாக அரசாங்கம் கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளதென அரசாங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கட்சித் தலைவர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

நேற்று நடைபெறவிருந்த கட்சித் தலைவர்களுக்கான கூட்டம், ஜாதிக ஹெல உறுமயவின் வேண்டுகோளை அடுத்து எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் அமைந்துள்ள அரசாங்க கட்சியொன்றின் பேச்சாளர் தெரிவித்தார்.

எதிர்வரும் 5 ஆம் திகதி இதனை நடத்துவது தொடர்பாக - அரசாங்கக் கட்சியின் பிரதான அமைபபாளருக்கும், சபாநாயகர் லொக்கு பண்டாரவுக்கும் இடையில் நேற்று முன்தினம் இணக்கம் காணப்பட்டது.

ஜாதிக ஹெல உறுமயவினால் அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ள இடைக்கால நிர்வாக ஆலோசனை தொடர்பாக எதிர்வரும் 20 ஆம் திகதி ஒத்திவைப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்படுவது குறித்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

# வேலையற்ற பட்டதாரிகள் நியமனம் ஒகஸ்ட் மாதம் முதல் செயற்படுத்தப்படும்

## நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகள் 30 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கும் தீர்மானம் முன்னர் கூறியது போலவே செயற்படுத்தப்படும் என்றும், அவர்களுக்கு அடுத்த மாத ஆரம்பத்திலிருந்து தொழில் வழங்கும்பணி ஆரம்பிக்கப்படும் எனவும் நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குவதன் பொருட்டு அரச வர்த்தமானி பிரசுரித்து, மீண்டும் விண்ணப்பங்களைக் கோருவதற்கு நிதி அமைச்சு தீர்மானித்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹபீர் காசிம் குறிப்பிட்டுள்ளது பற்றி நிதி அமைச்சரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் - பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் தீர்மானத்தில் எவ்வித மாற்றங்களும் செய்யப்படவில்லை விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள பட்டதாரிகளுக்கு அந்தந்தப் பிரதேச செயலகங்களில் நேர்முகப் பரீட்சைகள் நடத்திமுடிக்கப்பட்டது.

விண்ணப்பதாரிகளின் விபரங்கள் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் தற்போது தொழில் செய்கிறார்களா, இல்லையா என்பது குறித்து சத்தியப்பிரமாண உறுதி மொழிகளை அனுப்பிவைக்குமாறு கோரி, விண்ணப்பதாரிகளுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைப் பிரகடனத்தின படி வாக்குறுதியளித்த மாதிரியே பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும் அது தொடர்பாக எவ்வித சிக்கல்களும் ஏற்படவில்லை, எனவே மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்படுவதற்கு எவ்வித தேவைகளும் ஏற்படவில்லை எனவும அவர் மேலும் தெரிவித்தார்.

# பஷீர் சேகுதாவூத் - நிஜாமுதீன் எம்.பி பதவியைப் பெறுவதற்கு ஐ.தே.கவில் இணைந்தனர்!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் மற்றும் அந்தக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான எம்.நிஜாமுதீன் ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டனர்.

ஐககிய தேசியக் கட்சியின் மூலம் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பெறுவதற்கு தேர்தல்கள் ஆணையாளரினால் விதிக்கப்பட்ட நிபந்தனைக்கமைய இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளவேண்டியிருந்தது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் செய்துகொண்ட தேர்தல்கால ஒப்பந்தத்தின் பரகாரம் வழங்கப்படவேண்டிய மேலுமிரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை, காங்கிரஸினால் சிபார்சு செய்யப்பட்ட இந்த இருவருக்கும் வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி-தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்திருந்தது.

ஆனால், குறிக்கப்பட்ட இவர்கள் கடந்த பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டவர்கள் என்பதால் இவர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதித்துவத்தை வழங்கமுடியாதெனக் குறிப்பிட்டு தேர்தல்கள் ஆணையாளர் அந்த விண்ணப்பத்தை நிராகரித்திருந்தார்.

இதையடுத்து இந்த இருவரும் ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கத்துவம பெற்று மீள விண்ணப்பம் செய்துள்ளனர்.

## மத்திய வங்கிக்கு புதிய ஆளுநர்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநராக 'கெய்ன்ஸ் குறூப்' கம்பனிகளின் தலைவர் சுனில் மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநராகப் பணியாற்றிய ஏ.எஸ்.ஜெயவர்த்தன ஓய்வுபெற்றதைத் தொடர்ந்தே, சுனில் மெண்டிஸை புதிய ஆளுநராக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்தார்.

புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள சுனில் மெண்டிஸ் நேற்று முதல் தமது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

# மதமாற்றத் தடைச்சட்டத்தை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை

## கிறிஸ்தவ ஆலோசனை மன்றம் அறிக்கை

மதமாற்றத்தைத் தடுப்பதற்கு ஏற்றவகையில் உருவாக்கப்படுகின்ற சட்ட நடைமுறைகளைத் தாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என கத்தோலிக்க ஆயர்களும், தேசிய கிறிஸ்தவ ஆலோசனை மன்றமும் விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'கட்டாய மதமாற்றத்தைத் தடை செய்தல்' என்ற தலைப்பிலான சட்ட மூலம் அமைச்சரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன், கடந்த மே மாதம் 28 ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தனிமனித சுதந்திரத்தை இந்தச் சட்டம் பாதிப்பதோடு, சிறுபான்மை மதங்களை ஒடுக்கும் நடவடிக்கையே இதுவென அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், இந்தச் சட்டத்தால் சிந்தனைச் சுதந்திரம், மனசாட்சி மற்றும் மதச்சுதந்திரம் என்பன பாதிக்கப்படும் என்றும், இவை வேறு பல பிரச்சினைகளுக்கு இட்டுச்செல்லும் என்றும் இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பட்டதாரிகளுக்கு வேலை; திட்டம் நிறுத்தப்படாதாம்!

## பிரதி நிதியமைச்சர் தெரிவிப்பு

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் எக்காரணம் கொண்டும் இடைநிறுத்தப்படமாட்டாது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டம் வெற்றிகரகமாக அமுல்ப்படுத்தப்படுவதை விரும்பாத சிலர் மேற்கொள்ளும் பிரசாரத்தில் எவ்வித உண்மையும் இல்லையென நிதித்துறை பிரதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ரஞ்சித் சியாம்பலபிட்டிய தெரிவிததார்.

மேலும் பட்டதாரிகள் வேறு தொழில் செய்கிறார்களா என்பது தொடர்பாக கண்டறிவதற்காக அவர்களிடமிருந்து உறுதிமொழிகளைப் பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய மேலும் தெரிவித்தார்.

# மருதங்கேணி பாடசாலை கண்காட்சி

(மருதங்கேணி)

மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆக்கத்திறன் கண்காட்சி நேற்றுமுன்தினம் பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ம.நவநீதமணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழீழ தேசியக் கொடியினை வடமராட்சிக் கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் புகழேந்தி ஏற்றிவைத்தார்.

பாடசாலைக் கொடியினை ஆசிரியர் சி.லோகநாதன் ஏற்றிவைத்தார். மங்கள விளக்கினை மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி ப.இரகுநாதன் ஏற்றிவைத்தார். ஆக்கத்திறன் கல்விக் கண்காட்சியை இந்த நிகழ்வின் பிரதம விருந்தினரான வடமராட்சி கல்விவலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். (122)

## சமகால அரசியல் கருத்தரங்கு

தமிழீழ மாணவர் பேரவையினால் நடாத்தப்படும் சமகால அரசியற் கருத்தரங்கின் 12 ஆவது தொடர் நாளைமறுதினம் காலை 10 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கில் பொருளியல் நுண்கலைத் துறைத் தலைவர் க.சிதமபரநாதனும், பொருளியல் ஆசிரியர் எஸ்.வரதராஜனும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

# இலங்கையர்களை ஈராக்கிற்கு அனுப்புவதில்லை

(கொழும்பு)

ஈராக்கிற்கு இலங்கைத் தொழிலாளர்களை அனுப்புவதில்லையென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அந்தநாட்டின் பாதுகாப்பு நிலவரம் கருதியே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கருணாசேன கொட்டியாராச்சி தெரிவித்தார்.

ஈராக்கில் தொழில்புரியும் இலங்கையர்கள் தொடர்பான உறுதியான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லையெனத் தெரிவித்த அவர் - சில வேலைவாய்ப்பு நிறுவனங்கள் ஈராக்கிற்கு இலங்கையர்களை சட்டவிரோதமாக அனுப்பிவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஹொலன்ட் அணியை வீழ்த்தி போர்த்துக்கல் இறுதிப் போட்டியில்!




போர்த்துக்கலில் நடைபெற்று வரும் ஐரோப்பிய கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் அரையிறுதிப் போட்டியொன்றில் ஹொலன்ட் அணியை எதிர்த்து விளையாடிய போர்த்துக்கல் அணி 2-1 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இதன்மூலம் யூரோ - 2004 போட்டியில் இறுதியாட்டத்துக்கு போர்த்துக்கல் அணி தெரிவானது.

லீக் முடிவில் முன்னணி நாடுகளான ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின் ஆகியவை காலிறுதிக்குக்கூட தகுதி பெறாமல் போயின.

காலிறுதி முடிவில் இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகள் வெளியேற்றப்பட்டன. ஹொலன்ட், செக் குடியரசு, போர்த்துக்கல், கிறீஸ் ஆகிய நாடுகள் அரையிறுதிக்குத் தகுதிபெற்றன.

ஐரோப்பிய உதைபந்தாட்டப் போட்டியின் முதல் அரையிறுதி லிஸ்பன் நகரில் நேற்று அதிகாலை நடந்தது. இதில் போட்டியை நடத்தும் போர்த்துக்கல் - முன்னாள் சம்பியனான ஹொலன்ட அணிகள் மோதின.



இரு அணிகளுமே பலம் வாய்ந்தவையாக இருந்ததால் ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது. உள்ளூர் ரசிகர்களின் ஆதரவைப் பயன்படுத்திக் கொண்டு போர்த்துக்கல் வீரர்கள் தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபட்டனர்.



இதன் பயனாக 26 ஆவது நிமிடத்தில் கோணர் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு போர்த்துக்கல் கோல் அடித்தது. ரொனால்டோ தலையால் முட்டி இந்த கோலை போட்டார். போர்த்துக்கல் முதல் கோலை அடித்ததும் உள்ளூர் ரசிகர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

முதல் பாதி ஆட்டத்தில் போர்த்துக்கல் 1-0 என்ற கோல் கணக்கில் முன்னணியில் இருந்தது. பதில் கோல் அடிக்க ஹொலன்ட் வீரர்கள் கடுமையாகப் போராடினர்.

ஆட்டத்தில் 58 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் 2 ஆவது கோலை அடித்து ஹொலன்ட்டுக்கு அதிர்ச்சியளித்தது. இதன்மூலம் போர்த்துக்கல் 2-0 என்ற முன்னிலை பெற்றது. இந்த கோலை போர்த்துக்கல் வீரர் மணிச்சே அடித்தார்.



2 ஆவது கோல் விழுந்த அதிர்ச்சியால் ஹொலன்ட் வீரர்கள் ஆக்ரோஷத்துடன் விளையாடினார்கள்.

ஆட்டத்தின் 63 அவது நிமிடத்தில் போர்த்துக்கல் வீரர் ஜோர்ஜ் அந்த்ராடோ எதிர்பாராத விதமாக சேம் சைட் கோல் (சுயகோல்) அடித்தார். இந்த கோலால் போர்த்துக்கல் அணியின் சக வீரர்கள் அதிர்ச்சியடைந்தனர்.



சமன் செய்ய ஹொலன்ட் அணி கடைசிவரை போராடியது. ஆனால் முடியவில்லை. இறுதியில் போர்த்துக்கல் 2-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

இந்த வெற்றி மூலம் போர்த்துக்கல் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. அந்த அணி முதல் முறையாக ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்ட இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

இதற்கு முன்பு 1984 மற்றும் 2000 ஆம் ஆண்டு ஐரோப்பிய கிண்ணத்திற்கான போட்டியில் அரையிறுதியில் தோல்வி கண்டிருந்தது.

## கே.சி.சி.சி கிண்ண அரையிறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்தும் கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

இன்று காலை 8.30 மணிக்கு யங்ஸ்ரார் விளையாட்டுக்கழத்தை எதிர்த்து பற்றீசியன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறவுள்ள இன்னொரு ஆட்டத்தில் கே.சி.சி.சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

## உலகக் கிண்ணத்தை இந்தியா கைப்பற்றுமென்கிறார் கிளைவ் லொயிட்



தற்போதுள்ள இந்திய கிரிக்கெட் அணி சிறந்த திறனுடன் உள்ளது. அந்த அணி விரைவில் உலக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றும் என்று மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் கப்டனும், ஐ.சி.சி போட்டி நடுவருமான கிளைவ் லொயிட் தெரிவித்தார்.

புதுடெல்கியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் - முரளிதரன் 10 ஆண்டு காலத்துக்கு மேலாக ஆடிய பிறகு பந்தை எறிவதாக கூறுவது வேடிக்கையாக இருக்கிறது. முறையற்ற பந்துவீச்சாளர் ஆரம்பத்திலேயே களையப்படவேண்டும் என்றார்.

## டெண்டுல்கருக்கு ஒஸ்கார் விருது

(லண்டன்)



சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) ஆண்டு தோறும் சிறந்த வீரர்கள், சிறந்த அணிகளைத் தேர்வுசெய்து கௌரவிக்க முடிவு செய்துள்ளது.

இதன்படி முதலாவது ஒஸ்கார் கிரிக்கெட் விருது வழங்கும் விழா செப்ரெம்பர் 7 ஆம் திகதி லண்டனில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த வீரர்கள், அணிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு விருது வழங்கப்படும்.

உலகின் தலைசிறந்த துடுப் பாட்ட வீரரான டெண்டுல்கரின் பெயர் ஒஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப் படலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது.

---

கரும்புலிகள் நினைவு

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் காலிறுதிப் போட்டி முடிவுகள்!

கரும்புலிகள் நினைவாக தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் மின்னொளியில் நடைபெற்றன.

முதலாவது போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து யங் கென்றிஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. முதல் பாதி ஆட்டத்தின்போது யங்கென்றிஸ் விளையாட்டுக்கழக வீரர்கள் அபாராமாக ஆடி 23 ஆவது நிமிடத்தில் முதலாவது கோலை அடித்தனர். யங் கென்றிஸ் அணித்தலைவர் ராஜா இந்த கோலை எதிர்பாராத விதமாக அடித்தார்.

இடைவேளையில் ஆட்டம் நிறுத்தப்பட்டு மீண்டும் போட்டி தொடர்ந்தபோது பல்கலைக்கழக அணி வீரர்கள் மிக விறுவிறுப்பாக ஆடி தமக்கு கிடைத்த பந்தை சரியான முறையில் பயன்படுத்தினர்.

72 ஆவது நிமிடத்திலேயே ரஞ்சித்குமார் அற்புதமான கோல் ஒன்றை அடித்தார்.

இரண்டு அணிகளும் சமநிலையில் இருந்தமையால் - தண்டனை உதைமூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. இதில் பல்கலைக்கழக அணி யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை 5-3 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

இந்தப் போட்டியின் பிரதம நடுவராக அருளானந்த சோதியும், உதவி நடுவர்களாக சாரங்கன், கிருஷ்ண குமார் ஆகியோர் கடமையாற்றினர்.

2 ஆவது போட்டியில் காளியம்பாள் விளையாட்டுக்கழகமும், சென் மேரிஸ் விளையாட்டுக்கழகமும் மோதின. இதில் முதல் பாதி ஆட்டத்தின்போது சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக கோல் காப்பாளரால் அவர்களது முயற்சி இலகுவாகத் தடுக்கப்பட்டது.

இடைவேளை முடிவடைந்து மீண்டும் ஆட்டம் தொடர்ந்தபோது 10 ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக வீரர் யூலியஸினால் முதலாவது கோல் அடிக்கப்பட்டது. அடுத்து ஆட்டம் முடிவதற்கு 5 நிமிடங்கள் இருந்தவேளை, கிடைத்த நேரில் உதையை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக வீரர் சுமன்ராஜ் தட்டிக்கொடுக்க அந்த அணியின் வீரர் வின்சன் கோலாக மாற்றினார்.

இதன்மூலம் 2-0 என்ற கோல் கணக்கில் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது. இந்தப் போட்டியின் பிரதம நடுவராக நவநேசனும், உதவி நடுவர்களாக அருளானந்தசோதி, சசிவண்ணன் ஆகியோரும் கடமையாற்றினர். (12)




# யாழ். கழகங்களுக்கிடையிலான ஹொக்கி சுற்றுப்போட்டி!

இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாண பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படும் யாழ்.மாவட்ட கழகங்களுக்கிடையிலான ஹொக்கி சுற்றுப்போட்டிகள் இன்று ஆரம்பமாகவிருக்கின்றன.

யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டிகளில் - 9 கழகங்கள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு மோதவுள்ளன.

இன்று காலை 7.30 மணிக்கு ‘ஏ’ பிரிவிலுள்ள கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

‘பி’ பிரிவிலுள்ள கிராஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் கோபபாய் ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான போட்டி இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதேவேளை, இன்று மாலை 4 மணிக்கு ‘ஏ’ பிரிவிலுள்ள யங் ஹென்றீசியன் விளையாட்டுக்கழக அணிக்கும் வடமராட்சி ஹொக்கி கழக அணிக்கும் இடையிலான ஆட்டம் இடம்பெறும்.

பிற்பகல் 5 மணிக்கு ‘பி’ பிரிவு ஆட்டமாக - சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும், யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும் இடையிலான போட்டி இடம்பெறும்.

# விம்பிள்டன் ரெனிஸ் போட்டி; பெடரர், செரீனா காலிறுதிக்குள்!

லண்டனில் நடைபெற்றுவரும் பிரபலம் மிக்க கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரெனிஸ் போட்டிகளில் உலகின் முதல் நிலை வீரர் ரோஜர் பெடரர் மற்றும் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் காலிறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றனர்.

உலகின் முதல்நிலை வீரரான ரோஜர் பெடரர் (சுவிற்சர்லாந்து) காலிறுதியில் 7 ஆம் நிலை வீரரான லைடன் ஹெவிட்டை எதிர்கொண்டார்.



இதில் பெடரர் 6-1, 6-7(1-7), 6-0, 6-4 என்ற செட் கணக்கில் வென்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றார்.

இரண்டாம் நிலை வீரரான அண்டி ரோடிக் (அமெரிக்கா) 7-6 (7-4), 7-6(11-9), 6-3 என்ற நேர் செட் கணக்கில் செஜங்கைத் தோற்கடித்தார்.


உலகின் 5 ஆம் நிலை வீரரான டிம் ஹென்மன் (இங்கிலாந்து) காலிறுதியில் அதிர்ச்சிகரமாகத் தோற்றார். புதுமுக வீரரான மேரியோ அன்சிக் (குரோஷியா), 7-6(7-5), 6-4, 6-2 என்ற நேர் செட் கணக்கில் ஹென்மனைத் தோற்கடித்தார்.

10 ஆம் நிலை வீரரான குரோஸ் ஜியான் 7-5, 6-4, 6-2 என்ற செட் கணக்கில் ஜேர்மனி வீரர் புளோரினைத் தோற்கடித்தார்.

ஆண்கள் ஒற்றையர் அரையிறுதி ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. ஒரு அரையிறுதியில் கடந்த முறை சம்பியனான பெடரர் (சுவிற்சர்லாந்து) - குரோஸ்ஜியான் (பிரான்ஸ்) ஆகியோர் மோதவுள்ளனர்.

மற்றொரு அரையிறுதியில் அண்டி ரோடிக் (அமெரிக்கா) - மேரியோ அன்சிக் (குரோஷியா) மோதவுள்ளனர்.

இதேவேளை, லண்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற விம்பிள்டன் மகளிர் காலிறுதி ஒற்றையர் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், சக நாட்டவரான ஜெனிபர் கேப்ரியாட்டியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார்.



முதலாவது அரையிறுதிப் போட்டியில் செரீனாவின் புயல்வேக ஆட்டத்தை எதிர்கொள்ள முடியாமல் திணறிய கேப்ரியாட்டி 6-4, 6-1 என நேர்செட்களில் தோல்வியடைந்து காலிறுதியோடு வெளியேறினார்.

45 நிமிடங்களிலேயே இந்தப் போட்டி முடிவுற்றதால் ரெனிஸ் ரசிகர்கள் ஏமாற்றமடைந்தனர்.

‘எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது. கேப்ரியாட்டி கடுமையாக போராடுவார் என்றே நான் எதிர்பார்த்தேன்.’ என்று செரீனா வில்லியம்ஸ் போட்டி முடிவுற்றவுடன் செய்தியாளர்களிடம் கூறினார்.

கேப்ரியாட்டி இந்தப் போட்டியில் பலமுறை இரட்டைத் தவறுகளைச் செய்து அதனால் புள்ளிகளை இழந்தார். முதல் செட்டை 24 நிமிடங்களில் கோட்டைவிட்ட அவர் - இரண்டாவது செட்டையும் 21 நிமிடங்களில் இழந்து விம்பிள்டன் அரையிறுதி வாய்ப்பைத் தவறவிட்டார்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



மட்டு திருமலை மாவட்டங்களில்

# திலீபன் மருத்துவமனை சேவை மூன்று தினங்கள் நடைபெற்றது

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினர், சிறப்பு மருத்துவ சிகிச்சையையும் ஆலோசனையையும் திருமலை, மட்டக்களப்பு பகுதியில் அமைந்துள்ள திலீபன் மருத்துவ சேவை நிலையங்கள் கடந்த வாரம் நடைபெற்றது.

பட்டாளிபுரம் திலீபன் மருத்துவ சேவையில் 165 நோயாளர்கள் சிகிச்சையும், ஆலோசனையும் பெற்றனர். இதில் இனங்காணப்பட்ட இருதய நோயாளர்களுக்கு எக்கோ காடியோ கிறாப் கருவிமூலம் 20 நோயாளர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, ஐந்து நோயாளர்களுக்கு சத்திரசிகிச்சை செய்ய வேண்டுமென கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்து கடந்த 26ஆம் திகதி சேனையூர் மத்திய கல்லூரியில் நடைபெற்ற மருத்துவமுகாமில் 520 நோயாளர்கள் சிகிச்சையும், ஆலோசனையும் பெற்றனர். இங்கு 30 இருதய நோயாளர்களுக்கு எக்கோ காடியே கிறாப் மூலம் பரிசோதனை செய்யப்பட்டது.

இதன்போது, ஏழு நோயாளர்களுக்கு சிகிச்சை செய்யப்பட வேண்டுமென கண்டுபிடிக்கப்பட்டது. 27ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் கதிரவெளி திலீபன் மருத்துவசேவை நிலையத்தில், 398 சிகிச்சையும், ஆலோசனையும் அளிக்கப்பட்டது. இதில் மூன்று நோயாளர்களுக்கு எக்கோ காடியோ கிறாப் மூலம் பரிசோதனை செய்யப்பட்டன. இதன்போது நோயாளி ஒருவருக்கு சத்திரசிகிச்சை செய்யப்படவேண்டுமெனவும் கண்டுபிடிக்கப்பட்டது.

கண், பல் என்பவற்றின் சிகிச்சை உள்ளிட, பொதுவான நோய்களுக்கும் மேலும் பலர் சிகிச்சை பெற்றனர். இந்தச் சிகிச்சைகள் நவீன ஆய்வுகூட வசதியுடன் மேற்கொள்ளப்பட்டன. இதில் விடுதலைப் புலிகளின் வைத்திய கலாநிதி பாலனுடன் வெளிநாட்டு இருதய சிகிச்சை நிபுணர்களும் கலந்து கொண்டனர்.

## கதிர்காமம் மஹோற்சவம் 17ஆம் திகதி ஆரம்பம்

(வடமராட்சி)

கதிர்காமக் கந்தனின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 17ஆம் திகதி கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 15 நாட்கள் விழாநடைபெறும்.

ஜூலை மாதம் 31ஆம் திகதி தீ மிதிப்பு வைபவமும், ஓகஸ்ட் முதலாம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து கடந்தமாதம் 20ஆம் திகதி பாதயாத்திரையாகச் சென்ற மெய்யடியார்கள் திருகோணமலை சென்று, அங்கிருந்து மட்டக்களப்பை சென்றடைந்தனர். இவர்கள் கொடியேற்ற நாளான ஜூலை 17ஆம் திகதி கதிர்காமத்தைப் போய் சேர்வார்களெனத் தெரிவிக்கப் படுகிறது. (17)

# யாழ். மாநகரப் பகுதியில் மூன்று வீதிகள் திருத்தும்

யாழ். மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட மூன்று வீதிகள் 13 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியுதவியில் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாநகர சபைக்கென இந்த ஆண்டுக்கு பிரமாண அடிப்படை மூலதன 'நன்கொடை நிதியாக, வடகிழக்கு மாகாண அமைச்சினால் 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியிலிருந்து 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் வண்ணார் பண்ணை லோட்டஸ் வீதியும், 6 லட்சம் ரூபா செலவில் ஆறுகால்மடம் -பழம் வீதியும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சினால் யாழ். மாநகர சபைக்கென ஒதுக்கப்பட்ட இந்த ஆண்டுக்கான மாகாண விசேட நன்கொடை நிதியிலிருந்து 5 லட்சம் ரூபா செலவில் யாழ். நகரப் பகுதியிலுள்ள சுவாட்ஸ் வீதியும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

வெகுவிரைவில் இந்த வேலைத் திட்டங்கள் பூர்த்தி' செய்யப்படும் என மாநகரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### முழு நிலா கருத்தரங்கு

அகவொளி குடும்பவள நிலையம் நடத்தும் முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு அகவொளி குடும்பவளத்துணை நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சார்ந்த வழிமுறைகளினூடாக நெருக்கீடுகளும், தீர்வுகளும் எனும் பொருளில் மருத்துவ பீட தொழில்நுட்பவியலாளர் சாவித்திரிதேவி இரவிச்சந்திரன் கருத்துரை வழங்கவுள்ளார்.

# அரசினர் வைத்தியசாலைக்கு மருந்து வகைகள் விநியோகம்

யாழ். சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவு, இந்த வருட இரண்டாவது காலாண்டுக்கான மருந்து வகைகளை யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகள் மற்றும் அரசினர் மத்திய மருந்தகங்கள் ஆகியவற்றுக்கு விநியோகம் செய்து வருகின்றது.

அண்மையில் கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சின் மத்திய மருந்துக் களஞ்சியத்திலிருந்து இங்கு லொறிமூலம் எடுத்து வரப்பட்ட மருந்து வகைகளே இவ்வாறு வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டு வருவதாக, யாழ். சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த முறை சமர்ப்பிக்கப்பட்ட மருந்து வகைகளில் குறைந்தளவு மருந்துகளே தங்கள் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும், இதனால், வைத்தியசாலைகளின் மருந்துத்தேவையை முற்றாகப் பூர்த்தி செய்ய முடியாதிருப்பதாகவும், சுகாதாரத் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வைத்தியசாலைகள் தமக்கு வழங்கப்பட்ட மருந்துவகைகளை அடுத்த தாயத்துக்கான மருந்துகள் கிடைக்கும்வரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

# சண்டிலிப்பாய் பகுதியில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், மக்கள் கூடும்பொது இடங்களில், பொலிஸார் வீதி விபத்து மற்றும் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

அண்மைக் காலமாக குடாநாட்டில் அதிகரித்து வரும் திருட்டுச் சம்பவங்கள், வீதி விபத்துக்கள் என்பனவற்றிலிருந்து மக்களை விடுவிக்கும் நோக்குடனே இத்தகைய கருத்தரங்குகளை நடத்தி வருவதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பொதுமக்கள் அன்றாடம் கூடும் இடங்களை பொதுச் சந்தைகள், ஆலயங்கள் ஆகிய இடங்களுக்குச் சென்று விழிப்புணர்வுப் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

முதற்கட்டமாக கடந்த வெள்ளிக்கிழமை மாலை சண்டிலிப்பாய் நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்குச் சென்ற பொலிஸார், அங்கு கூடி நின்ற மக்களை ஆலய வளாகத்தினுள் ஒன்று கூட்டி விழிப்புணர்வு பிரசாரத்தை நடத்தினர். (44)

# மயிலிட்டி அந்தோனியார் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்ற வழிபாடு

பலாலி உயர் பாதுகாப்பு வலையத்தினுள் அமைந்துள்ள மயிலடி புனித அந்தோனியார் தேவாலயத்தில் விசேட திருப்பலி வழிபாடுகள் கடந்த செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றன. கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலைக் காரணமாக பல வருடங்களாக இந்த தேவாலயத்தின் ஆராதனைகள் எதுவும் இடம்பெறவில்லை என்பதுடன், தற்போதைய அமைதியான சூழ்நிலையில் இந்த ஆலயத்தல் மத வழிப்பாடுகளை நடத்த யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால கத்தோலிக்க மக்களுக்கு அனுமதி வழங்கினார்.

இந்த மத வழிபாட்டில் அருட்தந்தையும் பேராயருமான நிக்லஸ். அருட்தந்தை ரொசான் செபஸ்தியான்பிள்ளை ஆகியோரின் தலைமையில் ஆராதனைகளும், வழிபாடுகளும் இடம்பெற்றன. இந்த மத வழிப்பாட்டில் வென்னப்புவ பிரதேசத்திலிருந்து வருகைதந்த சுமார் 400 இற்கும் மேற்பட்ட கத்தோலிக்க பக்தர்களும் கலந்துக் கொண்டார்கள்.

பொது மக்கள் பிரவேசிக்க தடைசெய்யப்பட்டுள்ள உயர் பாதுகாப்பு பகுதியில் அமைந்துள்ள இந்த ஆலயத்தில் நடத்துவதற்கு நீண்ட காலத்துக்குப் பின்னர் அனுமதி கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### முதியோர் இல்லத்துக்கான அடிக்கல்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் முதியோரைப் பராமரிக்கும் இல்லம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த இல்லத்தை அமைப்பதற்கான அடிக்கல்லை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி இ.கதிரவேற்பிள்ளையால் நேற்று முன்தினம் நாட்டப்பட்டது. (17)

# உள்ளூராட்சி வார நிகழ்வுகள் பிற்போடப்பட்டதாக அறிவிப்பு

இந்த மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை இடம்பெற இருந்த உள்ளூராட்சி வார நிகழ்வுகள் பிற்போடப்பட்டுள்ளது.

இந்தமாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை உள்ளூராட்சி வாரமாக பிரகடனப்படுத்தப் பல்வேறு செயற்றிட்டங்கள் மெற்கொள்ளப்பட உள்ளதாகவும், உள்ளூராட்சி அமைச்சு அறிவித்திருந்தது.

ஆனால், எதிர்வரும் 10ஆம் திகதி இடம்பெறவுள்ள மகாணசபைத் தேர்தல் காரணமாக உள்ளூராட்சி வார நிகழ்வுகள் இந்தமாதம் 19ஆம் திகதி முதல் 25ஆம் திகதிவரை உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

# 31 ஆயிரத்து 668 சிறுவர்கள் பாடசாலையிலிருந்து இடை விலகல்

இலங்கையில தேசிய மட்டத்தில் 5 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட 4 லட்சத்து 31 ஆயிரத்து 668 சிறுவர்கள் பாடசாலையை இடை நடுவில் நிறுத்தியுள்ளனர். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விபரத்தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

வடக்கு - கிழக்கு மகாணத்தைப் பொறுத்தமட்டில் 5 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்ட நிலையில் சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் சிறுவர்கள் பாடசாலையை இடை நடுவில் நிறுத்தியுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (17)



மல்லாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட மக்கள் வங்கி கிளையின் நீடித்த கருமபீடத்தை கலாநிதி க.குணராஜா திறந்து வைப்பதையும், விருந்தினர்களாக கலந்துகொண்டோரை பான்ட் வாத்தியக் குழுவினர் அணிவகுத்து வரவேற்பதையும் படங்களில் காணலாம். (படம்- தீபன்)

# சின்னஞ் சிறு செய்திகள்

### வடமராட்சி வலயமட்ட ஆங்கில தின போட்டிகள்

வடமராட்சி வலயமட்ட ஆங்கிலதின போட்டிகள் எதிர்வரும் 10ஆம் திகதி காலை 9 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் கோட்டமட்டப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப்பெற்ற மாணவர்கள் பங்குபற்றுவர். (12)

### மணவிழாக்கோல திருவிழா

(கொக்குவில்)

அளவெட்டி, நாகேஸ்வரம், ஸ்ரீ நாக வரத நாராயணர் கோவிலில் எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மணவிழாக் கோல திருவிழா நடைபெறும்.

நாராயண சுவாமிக்கு விசேட அபிடேக ஆராதனைகள் இடம்பெற்று லஷ்மி சமேதராய் திருவீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும். (206)

### வடமராட்சி இளைஞர் மேம்பாட்டு கழகத்தின் நிர்வாகத் தெரிவு

வடமராட்சி இளைஞர் மேம்பாட்டுக் கழகத்தின் 2004ஆம் ஆண்டுக்கான நிர்வாகசபைத் தெரிவு, கடந்த சனிக்கிழமை வடமராட்சி கோட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் தலைமையில் நடைபெற்றது.

இளைஞர் மேம்பாட்டுக் கழகத் தலைவராக வேதாபரணமும், செயலாளராக வரதராஜனும், பொருளாளராக ராஜசீலனும், இணைச செயலாளராக ஜெயதாசும், உபதலைவராக கங்காதரனும், கணக்காய்வாளராக விவேகானந்தனும் தெரிவு செய்யப்பட்டனர். (12)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்



பெயர் : சி. ஜனனிஜா
முகவரி : பழைய உடையார் கட்டு ஒழுங்கை, பருத்தித்துறை

ஆறாவது அகவையில்



பெயர் : நி. நிருபா
முகவரி : மருதடி வீதி, யாழ்ப்பாணம்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்



## சிநேகிதியே

# தம்மிடமுள்ள திறமைகளை ஒவ்வொருவரும் சரியான முறையில் பயன்படுத்தவேண்டும்



பருத்தித்துறை முதலாம் கட்டையில் போரூட்டின் ஆதரவில் இயங்கிவரும் தையல் பயிற்சி நிலையத்தில் ஆசிரியராகக் கடமை ஆற்றிவரும் விஜிதா ராஜேந்திரன் என்பவருடன், நேர்காணல் ஒன்றினை மேற்கொண்டபோது, அவர் எங்களுடன் பகிர்ந்து கொண்ட கருத்துக்களை வாசகர்களுக்காகத் தருகின்றோம்.

நான் பருத்தித்துறை புலோலி மேற்கு, கிராமக்கோடு எனும் இடத்தில் வசித்து வருகின்றேன். எனக்கு 2 அண்ணன்களும், தம்பியும் உள்ளனர். இதில் அண்ணன்கள் இருவரும் திருமணம் முடித்துவிட்டனர். தம்பி கிராமக்கோடு பெற்றோல் நிலையத்தில் பணிபுரிகின்றார்.

எனது அப்பா பருத்தித்துறை துறைமுகத்தில் காப்பாளராகக் கடமையாற்றினார். அவரின் வருமானம் ஓரளவு போதுமானதாக இருந்தபோதும், எனது தாயார் எம்மை வளர்த்து ஆளாக்கவேண்டும் என்ற நோக்குடன், தேநீர்க் கடை ஒன்றையும் வைதது நடாத்திவருகின்றார்.

எனது ஆரம்பக்கல்வியை அருகில் உள்ள பாடசாலையில் கற்றபோதும், 6 ஆம ஆண்டிலிருந்து க.பொ.த உயர்தரம் (கலைப் பிரிவு) வரை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்றுவந்தேன்..

எனது வீட்டில் தாயாரும் வேலைக்குச் செல்வதால். நானும் ஒரே ஒரு பெண் பிள்ளையாகவும் காணப்படுவதால், வீட்டு வேலைகள் எல்லாம் தனியாகவே முடித்துவிட்டு, பாடசாலைக்குச் செல்லவேண்டியநிலை காணப்பட்டது. இதனால், எனது படிப்புக்கு இவை தடையாகவும் அமைந்தன.

மேலும், படித்துக்கொண்டு இருக்கும் போதே முறைசாராக் கல்வி நிறுவனத்தில் தையல் பயிற்சிகளை நடாத்தி வந்தபோது, நானும் அதில் பங்குபற்றினேன். அந்த நேரம் படித்துக் கொண்டிருந்தமையால் என்னால் சிறப்பாக இதில் ஈடுபடமுடியவில்லை. ஆகையால் மேற்கொண்டு 1996 ஆம் ஆண்டு இளைஞர் சேவைமன்றத்தினால் நடாத்தப்பட்ட ஐசிங், தலையலங்காரம், கடதாசிப்பூக்கள் தயாரித்தல், சிற்றுண்டி தயாரித்தல் போன்றவற்றுடன் தையலையும் பழகிச் சான்றிதளையும் பெற்றேன்.

1998 ஆம் ஆண்டு போரூட் நிறுவனத்தில் அங்கத்தவராகச் சேர்ந்து, சில உதவிகளைச் செய்துவந்தேன். அதன் பின்னர் 1999 ஆம் ஆண்டு போரூட் தையல் நிலையத்தில் வங்கியாளராகக் கடமையாற்றியவர் - வெளிநாடு சென்றமையால் எனக்கு அந்த வேலையைக் கிடைத்தது.

2000 ஆம் ஆண்டிலிருந்து தையல் பயிற்சி நிலைய ஆசிரியராகவும், வங்கியாளராகவும் கடமை புரிகின்றேன்.

இப்போது எனது வருமானத்தை 3000 ரூபாவாகவும் உயர்த்தியுள்ளனர். 2003 ஆம் ஆண்டு யூ.என்.எச்.சி.ஆர் இன் ஆதரவில் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 30 பிள்ளைகளைக் கொண்ட பயிற்சிவகுப்பைக் நடத்திதேன். இந்த நிறுவனமானது இவர்களுக்கு சில சலுகைகளையும் செய்தது. அதாவது, அவர்கள் பழகுவதற்குப் துணிகள் கூட இந்த நிறுவனம் இலவசமாக வழங்கி வந்தது.

இந்த ஆண்டில் எனக்கு மறக்க முடியாத சம்பவம் ஒன்று இடம்பெற்றது. 2003 ஆம் ஆண்டு 10 ஆம் மாதத்தில், போரூட் நிறுவனப் பொறுப்பதிகாரி ரொனிக்கொன்ரான் ரைம் என்பவரிடமிருந்து 'சிறந்த ஆசிரியை' என்ற சான்றிதழ் வாங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையத்தில் இலவசப் பயிற்சிகளையே நடாத்தி வருகின்றோம். ஏறக்குறைய 130 பிள்ளைகளுக்கு மேலாகப் பயிற்சியை முடித்துத் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

இந்த நிறுவனத்தில் பயிலவிரும்பும் பெண்கள் தமது கிராம அலுவலரின் ஊடாக வறிய கோட்டிற்குட்பட்ட பிள்ளைகள் என உறுதிப் படுத்தியவர்களுக்குப் போரூட் நிறுவனம் உதவிகளைச் செய்து வருகின்றது.



மேலும், தற்போதைய பணப் புழக்கத்தின் காரணத்தால் வீட்டில் அனைவரும் உழைக்க வேண்டிய தேவையுள்ளது. ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒருவகையில் திறமை இருக்கும். அதனைச் சரியான முறையில் பயன்படுத்தினால், நிச்சயம் முன்னேற முடியும்.

ஒவ்வொரு பெண்ணும் ஏதாவது ஒரு சுய தொழிலைப் பயின்று வந்தால், அது ஏதோ ஒருவகையில் துணைநிற்கும், எனக்கூறி எம்முடனான கருத்துப் பரிமாற்றத்தை நிறைவு செய்துகொண்டார்.

**க.கனெக்ஸ்**

# குழந்தை வளர்ப்பில் முக்கிய பிரச்சினை



குழந்தை வளர்ப்புப் பற்றி இப்போது, நிறையக் கட்டுரைகள் வருகின்றன. இருந்தாலும், மிக முக்கியமான ஒரு பிரச்சினை பற்றி யாருமே கவலைப்படுவதில்லை. அந்த முக்கியமான பிரச்சினை பற்றிப் பார்ப்போம்.

குழந்தைகள் பிறந்ததிலிருந்து ஆறுமாதம் ஒரு வயதுவரை அடிக்கடி சிறுநீர் கழிக்கின்றனர். அடிக்கடி ஈரமாகும் உடையை மாற்றி, மாற்றுடையை அணியவேண்டும் என்ற காரணத்தினாலேயே பலர் தங்கள் குழந்தைகளுக்கு ஒரு வயது அல்லது இரண்டு வயது வரை உடைபோடாமல் மேலே ஒரு துணி மட்டும் போர்த்தி படுக்கவைத்துவிடுகிறார்கள். இடுப்பில் ஆடை இல்லாமல் பழக்கப்படுத்தப்பட்ட குழந்தைகள், வளர்ந்ததும் எந்த விதமான ஆடைகளும் அணிய விரும்ப மறுக்கினறனர். அப்பொழுது அடித்து மிரட்டி அதைப் போடு.... இதைப்போடு என்று மிரட்டுவதால் என்ன பயன்?

சில தாய்மார்கள் தங்கள் குழந்தை - ஒன்றரை வயதுவரை வெளியில் செல்லும் நேரம தவிர வீட்டுக்குள் - குழந்தைக்கு உடை கூட உடுத்தாமல் வெறும் உடம்பாகவே வளர்க்கின்றார்கள். அவர்கள் ஏன் இப்படி குழந்தைக்கு உடுப்பு போடாமல் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டால்,

ஒரு நாளைக்கு முப்பது நாற்பது உள்ளாடைகளை தோய்க்க வேண்டும். ஒன்றைப் போட்டு இரண்டாவது நிமிடமே ஈரமாக்கி விடுகின்றனர். இதனால், இது ஒன்றும் சரி வாராது என்று அப்படியே விட்டுவிடுகின்றோம். இதன்பிறகு பிள்ளை பாடசாலைக்கு செல்லும் நாட்களில், சீருடைக்கு உள்ளாடை அணிய மறுக்கின்றது. இதனால், தாயிடமும், ஆசிரியரிடமும் அடியும், பேச்சும் வாங்குகின்றது.

இவ்வாறு நிறையப்பேர் தன் குழந்தைக்கு தவறான பழக்கத்தை ஏற்படுத்திவிட்டு, பிறகு அடியும், பேச்சும் கொடுக்கிறார்கள். இது தேவையா? குழந்தை தவள ஆரம்பிக்கும் போதே, அதற்கு உடை அத்தியாவசிய தேவையாகும். உடை அணிவிக்காமல் எப்போதும் குழந்தையை வைத்திருக்காதீர்கள். இது குழந்தைக்கும், உங்களுக்கும் நல்லது.

அதேபோல் கொஞ்சம் வளர ஆரம்பித்து - அது நிறங்களை, பொருட்களை உணரும் நிலைக்கு வரும் போது கண்டிப்பாக உடை அணிவதற்குப் பழக்கியெடுக்கவேண்டும். ஆண்பிள்ளை எப்படி இருந்தாலும் என்ன? என்று வீட்டில் பெரியவர்கள் பெருமையாகச் சொல்லிக் கொண்டு ஆடையின்றி அலையவிடுவதை தவிர்க்கவேண்டும்.

ஆண்குழந்தையானாலும் சரி, பெண் குழந்தையானாலும் சரி உடலின் மிக முக்கியமான பாகத்தில் துணியினால் மூடாமல் விடுவதால், இருபாலாருக்குமே காற்று, நீர், மண், விளையாட்டுப் பொருட்கள் என்பவற்றினால் தொற்று ஏற்பட்டு அபாயம் ஏற்படுகின்றது.

தவழும் குழந்தைக்கு இதனால் இன்னும் ஆபத்துக்கள் அதிகம். நம் கவனக்குறைவால் தரையில் தவறவிடப்பட்ட ஊசி, குண்டூசி, தடிப்பான பொலித்தீன் உறைகளின் முனைகள், வெட்டிய மரக்கறிகளின் கழிவுகள் அல்லது வால்பகுதி, நார், ஊதுபத்திகுச்சி, நெருப்புக்குச்சி போன்ற ஏதேனும் ஒரு பொருள் குத்தவோ அல்லது உள்ளே சென்றுவிடவோ கூட வாய்ப்புகள் உள்ளது.

அதற்காக குழந்தைகளுக்கு விலை உயர்ந்த உள்ளாடைகளை அணிவிக்க வேண்டும் என்பதில்லை. நாம் வருடாவருடம் கோடை காலத்தில் அணிந்துவிட்டு பழையது என்று தூக்கி வீசும் நூற்சேலை, பருத்தித் துணிகள் இவைகளே போதுமானது.

துணியை நன்கு துவைத்து, வெளியில் காயவைத்து, எடுத்து சதுர வடிவமாக வெட்டி அதன் நேரெதிர் முனைகளை இணைத்தால் அது முக்கோண துணியாகிவிடும். அதன் மூன்று முனைகளையும் தெறி அல்லது ஒட்டக் கூடியபட்டி வைத்து தைத்து விடுங்கள். குழந்தைக்கு அண்டாதபடி மெல்லியதாகவே வைத்து உபயோகப்படுத்துங்கள்.



அதேபோல் குழந்தைகளுக்கு அணிகின்ற துணிகளை ஒவ்வொரு முறையும் துவைக்கும்போது, தொற்று நீக்கி கொண்டு துவையுங்கள் எந்தக் காரணம் கொண்டும் சேர்த்து வைத்து துர்நாற்றம் அடிக்கும் அளவுக்கு விடாதீர்கள். துணிகளைத் துவைத்தவுடன் வெயிலில் உலர விட்டு காய்ந்ததும் மடித்து வையுங்கள். அப்படியில்லாமல் வெயிலில் காய்ந்த துணியை அதே சூட்டுடன் குழந்தைக்கு அணிவித்துவிடாதீர் கள்.

குழந்தைகளை றப்பர் விரிப்பில் நேரடியாக படுக்கவைக்காதீர்கள். குழந்தை சிறுநீர் கழித்தவுடன் அதன் உடம்பு, தலை எல்லாம் நனைந்து விடுகின்றது. அதனால், எப்பொழுதும் றப்பர் விரிப்பில் நல்லதடிப்பான பருத்தித் துணியை போட்டபின்பே குழந்தையை படுக்கவையுங்கள்.

## சிநேகிதிக்கு ஒரு மடல்



### அன்புள்ள சிநேகிதியே!

உன் எழுதுகோல் பிரசவித்த எண்ணக குழந்தைகள் கடல் கடந்து என்னை வந்தடைந்தன. நன்றிகள் பல உனக்கு. ஒருவனது முகத்தின் விகாரத்தினைப் படம்பிடித்துக் காட்டும் கண்ணாடிபோல் எமது குடாநாட்டுக் கலாசாரத்தை உனது மடல் - படம் பிடித்திருந்தது. உனது எழுத்துக்களின் தியாகத்தை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

என் பிரிய சிநேகிதியே அண்மையில் என் உள்ளத்தை நெருடிய ஒரு விடயத்தை உனக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

கடந்த எட்டு வருடங்களுக்கு முன்னர் கனடா சென்றிருந்த எனது நண்பி ஒருத்தி அண்மையில் நாடு திரும்பியிருந்தாள். பழைய நட்பால் நானும் அவள் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அவள் என்னைத் தனது கணவன் மற்றும் பிள்ளைகளுக்கு அறிமுகம் செய்து வைத்தாள். ஏதோ கனடாவில் பிறந்து வளர்ந்தவள் போன்று ஆங்கிலத்திலே அறிமுகம் நடந்தது.

உடனே எனக்கு 'மெல்லத் தமிழ் இனிச்சாகும் - அந்த மேற்கு மொழிகள் புவிமிசை மேவும்' என்கின்ற புரட்சிக் கவிஞன் பாரதியின் பாடல்கள்தான் ஞாபகம் வந்தன.

நண்பியே புலம்பெயர்ந்து மேலைத் தேசத்தில் வாழும் என் இனிய தமிழ் உறவுகளுக்கு ஒன்றை, உணர்வின் அடிததளத்தில் நின்று உரைக்க விரும்புகின்றேன்.

அன்று பாரதி கேட்ட வினாவினையே உங்களிடம் நானும் வினாவுகின்றேன். 'நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு வாழ்ந்திடுதல் நன்றோ'? சொல்வீர்.

நாம் தமிழர் என்று சொல்லிக் கொண்டு வாழ்வதில் எந்தப் பயனும் இல்லை. இன்று புலம்பெயர்ந்து வாழும் எம்மவர்கள், ஏனோ தமிழ் மொழியைப் பேசுவதைத் தரக்குறைவாக எண்ணுகின்றனர். இந்த உலகத்திலே இரண்டுக்குத் தான நாம் தாயின் அந்தஸ்தையும், கௌரவத்தையும் கொடுக்கின்றோம். ஒன்று தாய்நாடு, மற்றது தாய்மொழி. இது நமக்கு மட்டும் உரய இயல்பல்ல. உலகிலுள்ள ஒவ்வொரு இனத்துக்கும் இந்தத் தன்மை உண்டு.

ஒரு இனத்தின் பண்பாடு இருப்பின், ஆணிவேராக இருப்பது மொழயே. ஒரு இனம் தனித்துவத்துடன் வாழ்ந்தது என்பதற்கான அடையாளமே மொழிதான். ஆனால், இன்று அதை ஏனோ உணர்ந்து கொள்ளவில்லை.

இன்று உங்கள் சந்ததியிடையே மருவி வரும் நம் தமிழ்மொழி - இனிவரும் சந்ததியிடை அருகிவிடும் என்பது திண்ணம்.

உங்களைப் பொறுத்தவரையில் சமூகத் தொடர்பாடல் மொழியாகிய ஆங்கிலத்தைக் கற்கவேண்டும் என்பது தவிர்க்க முடியாததொன்று. ஆனால், அதறகாக ஆதிசிவன் பெற்றுவிட அகத்தினால் தாலாட்டப்பட்டு ஆயிரம் ஆயிரம் புலவர்களால் சீராட்டப்பட்ட எம்தாய்மொழி வழக்கிழந்து போவதை அனுமதிக்க முடியாது.

உங்களைப் பொறுத்தவரையில் வீட்டிலே தாய்மொழியிற் பேசலாம். எமது பிள்ளைகளுக்கு நாம் மொழியை எழுதக் கற்றுக் கொடுக்கலாம், எல்லாவற்றுக்கும் மேலாக நீண்ட விடுமுறையில் தாய்நாடு திரும்பும் நீங்கள், உங்கள் குழந்தைகளை நம்மொழியில் தேர்ச்சி பெறச்செய்யலாம்.

ஆனால், வெளிநாட்டிலிருந்து வரும் எம்மவரைப் பொறுத்தவரையில், தாய்மொழியில் பேசுவதைத் தரக்குறைவாக எண்ணுகின்றார்கள். இங்கு வந்தாலும், தம பிள்ளைகளுடன் ஆங்கில மொழியில் பேசுகின்றார்கள். அப்படிப் பேசுவது ஏதோ அந்தஸ்தில் உயர்வு என்று எண்ணுகின்றார்கள் போலும்.

உலகிலே தன் தாய்மொழியிற் பேசத் தயங்கும் ஒரே ஒரு இனம் தமிழினம் என்பது வேதனையான விடயம். நண்பியே! உங்கள் குழந்தைகள் தம்தாய் மொழியில் தேர்ச்சி பெற உழைக்கவேண்டியது, புலம்பெயர்ந்து வாழும் ஒவ்வொரு பெற்றோரினதும் தலையாய கடமையாகும்.

எனவே, வான்புகழ் கொண்ட நம் தமிழ்மொழி தழைத்தோங்க எம்மவர் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனக் கூறி, என் மடலை நிறைவு செய்கின்றேன்.

அன்புள்ள சிநேகிதி

நீலா

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# பிஞ்சுமுகத்தின் தேடல்


அம்மா!... அம்மா!... நான் இருமுறை கூப்பிட்டும் பதிலில்லை. எங்கே போய்விட்டாள். மீண்டும் கூப்பிடுகிறேன். அம்மா!... இம்முறை என் குரலுக்குப் பதில் கிடைத்தது. "என்ன குஞ்சு" அம்மா கேட்படியே வந்தாள். அவள் குரலில் இருந்த கனிவு என் உள்ளத்தைத் தொட்டது. என் அருகில் வந்தாள். என் நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள். 'காய்ச்சல் இளகியிருக்கு' என்று சொல்லியபடி மீண்டும் நீரில் நனைத்த துணியை என் நெற்றியில் போட்டாள். ஓடிக்கொலோன் கலந்து குளிர்மை என் நெற்றியில் பரவச் சுகமாக இருந்தது. அந்த நறுமணம் என் நினைவை இழுத்துச் சென்றது.

"நான் ஒரு செல்லப்பிள்ளை! எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து அப்பாவும் அம்மாவும் எப்பவும் சண்டைதான். இரண்டு பேரும் வேலை செய்வது எனக்குத் தெரிய வந்தபோது என் வயது இரண்டைத்தாண்டி மூன்றாகிவிட்டது. என் வீட்டில் நான் ஒரு மகாராணியாக இருந்தேன்.

அப்பாவும் அம்மாவும் என்னைச் செல்லமாக வளர்த்தாலும், ஏனோ அடிக்கடி முரண்பட்டு, வாய்த்தர்க்கம் செய்வார்கள். ஒருநாள் சண்டை முற்றி அம்மா சொன்னாள் - "நான் போய் என்ரை பாட்டிலை இருக்கப்போறன்!" அப்பா ஒன்றும் பேசவில்லை. என்னை நோக்கி வந்தார். என்னைத் தூக்கினார். மெல்ல வீட்டைவிட்டு நடக்கத் தொடங்கினார்.

அம்மா! அவள் ஒன்றும் பேசாமல் நின்றாள். நான் அம்மாவைப் பார்த்தேன். அவள் நின்ற இடத்தைவிட்டு நகரவில்லை. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை? என்றாலும் அப்பாவின் முகத்தைப் பார்த்துக் கேட்டேன். அப்பா...! நான்... அம்மாவோடை நிக்கப்போறன்! எப்படியோ சொல்லி முடித்துவிட்டேன். அப்பா.. என் சொல்லைக் கேட்கவில்லை. அவர் வேகமாக நடக்கத் தொடங்கினார். நான் அப்பாவின் தோளுக்கு மேலாக அம்மாவைப் பார்த்தேன். அம்மா தூரத்தில் சேலைத்தலைப்பால் கண்ணைத் துடைத்தபடி நின்றாள். அவளை வரும்படி நான் கையைக் காட்டினேன்.

அம்மா சில அடிகள் முன்னெடுத்து வைத்தாள். எனக்கு மனதில் மகிழ்ச்சி. அப்பா எங்கள் வீட்டைக் கடந்து, தெருவுக்கு வந்தவுடன் இன்னும் வேகமாக நடக்கத் தொடங்கினார். அவரது கரங்கள் என்னை இறுகப் பற்றியபடி இருந்தன... எனக்கு அவரது பிடி நோவாக இருந்தது. நான் அம்மாவைத் திரும்பிப் பார்த்தேன். அவள் எங்களைத் தொடர்ந்து வராமல் வீட்டு வாசலிலே நின்று விட்டாள். எனக்கு ஏமாற்றமாக இருந்தது. அழுகை வந்தது. அப்பாவின் தோளில் சாய்ந்து அழுதேன். என் கண்ணீர் அப்பாவின் தோளை ஈரமாக்கியபோது, அவரது கரங்கள் என் முதுகை அன்போடு வருடின.



வழக்கமாக என்னைத் தூங்க வைப்பதற்கு அப்பா அப்படித்தான் செய்வது வழக்கம். இப்போதும் எனக்குத் தூக்கம் வந்து விட்டது.

நான் கண்களை விழித்தபோது வேறொரு வீட்டிலே இருந்தேன். சற்றுத்தள்ளி ஒரு மேசை. அதனருகில் சில கதிரைகள். அப்பா கதிரையில் இருந்தார். அவர் முதுகு என் பக்கம் இருந்ததால் முகம் தெரியவில்லை. ஆனால், அவருக்கு முன்னே இருந்த உருவத்தின் முகம் எனக்கு நன்றாகத் தெரிந்தது. வட்டநிலாமுகம். பால் வெள்ளைநிறம். ஒட்டுப் பொட்டு. நெற்றிப்பக்கம் கொஞ்சம் தலைமயிரை வெட்டியிருந்தது. மூக்கிலும், காதிலும் ஒன்றுமில்லை. வடிவென்றாலும் முகத்தில் ஏதோ ஒரு வக்கிரம் எனக்குத் தெரிந்தது. நான் வெறுப்போடு கண்களை மூடிக்கொண்டு அவர்களுடைய பேச்சைக் கவனித்தேன்.

அந்த உருவம் பேசியது. "இப்ப ஏன் உந்தப் பெட்டையும் கொண்டு இஞ்சை வந்தனியள். தனிய வந்திருக்கலாம். உந்தச் சனியனை ஆர் பார்க்கிறது." அப்பா சொன்னார். "என்னாலை அவளை விட்டிட்டு இருக்க முடியாதெண்டு உமக்குத் தெரியும்தானே! இவள் இல்லாவிட்டால் நான் எப்பவோ இஞ்சை வந்திருப்பன்" "உப்பிடித்தான் சொல்லி வருடம் மூன்று போய் விட்டது! உதுக்கு இப்ப எத்தினை வயது? உருவம் கேட்டது. அப்பா சொன்னார் "அஞ்சு வயசு தொடங்கிவிட்டது. இன்னும் ஒரு வருசத்திலை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பலாம்." அவரது குரலில் ஒரு நடுக்கம் இருந்தது. "என்னவோ என்னைக் கரைச்சல்படுத்த வேண்டாம்." உருவம் சொல்லிக்கொண்டே எழும்பிப்போனது. அதற்குப் பின்னாலை அப்பா போனார்.

நான் கண்களைத் திறந்து பார்த்தபோது கண்டகாட்சி இதுதான். நான் அம்மாவை நினைத்தேன். குங்குமப் பொட்டும், மூக்குத்தியும், சிவப்புக் கல்லுத்தோடும், நூல் புடைவையுமாக அவள் பாடசாலைக்குப் போகும் காட்சி என் கண்முன்தோன்றியது.

"குஞ்சு இன்னும் ஒரு வருடத்திலை என்னோடை வரலாம் என்று அம்மா சொன்னது இப்ப நினைவுக்கு வந்தது. அப்பா சொன்னார். "என்ரை மகாராணி நடக்கத்தேவையில்லை. நான் அவளை மோட்டார் சைக்கிளிலை கூட்டிக்கொண்டுபோவன். எனக்குப் புளுகமாக இருந்தது.

அப்பா வேலை செய்யிற இடத்திலை வெளிநாட்டுக்காரர் கனக்க வேலை செய்யினம். ஒருநாள் - நானும், அப்பாவும், அம்மாவும் கோயிலுக்கு நடந்து போய்க் கொண்டிருந்தபோது அவையளும் வாகனத்திலை வந்தவை.

எனக்கு அந்த வாகனத்திலை ஏறிப் போக விருப்பம். அப் பாவை அவையள் ஏற்றிச் செல்ல விரும்பியபோது, அம்மா மறுத்துவிட்டாள். அன்றைக்கு வீட்டில் அப்பாவும் அம்மாவும் சண்டை போட்டார்கள். அப்போது அம்மா சொன்ன இவதைத்னோ!...

ஒரு கிழமை எனக்கு வாழ்க்கை நரகமாக இருந்தது. அப்பாவும், அந்த உருவமும் காலையில் வாகனத்தில் ஏறிப் போவார்கள். வீட்டில் நானும் சமையற்கார அப்புவுந்தான்.

அப்பு பாவம்! எழுபதுவயது என்றாலும், சமையல் வேலை எல்லாம் செய்வார். நானும் அவருக்கு உதவிசெய்வேன். வீட்டுக்குள்ளேதான். வெளியேபோக முடியாது. எனக்குச் சிறைவாசம்தான்.

அப்புவிடம் ஒருநாள் கேட்டேன். நீங்கள் கடைக்குப் போகும்போது நானும் வரட்டுமா? அப்புவும் சரியெண்டு சொன்னார். அவருக்கு என்ரை திட்டம்...! அவருக்குத் தெரியாது. இரண்டு பேரும் நடந்து போனோம். நான் தெருவில் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுவந்தேன். இடம்புதிசாக இருந்தது. என்மனம் முருகனை நினைத்தது. முருகா! என்னை என் அம்மாவிடம் சேர்த்துவிடு...! நானும் அப்புவும் தெருவால் திரும்பி இன்னொரு தெருவில் நுழைய, முருகனுக்கு அரோகரா!... என்ற குரல் கேட்டது.

நான் என் திட்டம் நிறைவேறும் நேரம் வந்துவிட்டதென்பதை உணர்ந்தேன். பறவைக் காவடி, பாற்காவடி, கரகம், பாற்செம்பு என்று வரிசையாக வர ஒரே சனக் கூட்டம்.

அப்பு கூட்டத்தில் மறைய, நான் சட்டென்று காவடி வரிசைக்குள் புகுந்து, பஜனைபாடிய சிறுவர் குழாத்துள் மறைந்து கொண்டேன்.

"வேல்முருகா! மான்மருகா வா! வா! முருகா" பாட்டு எனக்கும் தெரிந்த பாட்டுத்தான். நானும் சேர்ந்து பாடினேன். அந்தக் குரல்களை யெல்லாம் வழிநடத்திய தேன்குரல் ஒன்று!... என் காதில் கேட்டபோது, நான் சிலிர்த்துப் போனேன். உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை வருடிய அந்தக்குரல் அம்மாவுடையது தான். நான் பசுக் கன்றுபோல கூட்டத்துள் துள்ளி முன்னேபோக... அம்மா!... கண்களை மூடியபடி வேல் முருகா!... என்று பாடியபடி... நான் காற்றாக விரைந்து அம்மாவின் கைகளைப் பற்றித் தொங்கினேன். அம்மாவின் கைத்தாளம் கீழே விழக் கண் திறந்து எனனைப் பார்த்தாள். அவள் வாய். "என்ரை குஞ்சு" என்று முணுக, என்னைத் தூக்கி னாள். நான் அம்மாவின் முகத்தை என் முகத் தோடு சேர்த்து அணைத்தேன். நான் தேடிய சொர்க்கம் இது... நினைவு கலைய அம்மாவைப் பார்த்துச் சிரித்தேன்.

மனோன்மணி சண்முகதாஸ்.

# அன்று சொன்னது அர்த்தமுள்ளது



பெண்களே உங்கள் பெண்மைக் குணங்களில் சந்தோஷமடையுங்கள். அது பற்றிக் கவி பாடுங்கள். இது இயற்கையிட மருந்து உங்களுக்குக் கிடைத்த மாபெரும்பேறு. அதை வீசியெறிந்துவிடாதீர்கள். ஏனென்றால், அவை ஆணிடம் இல்லை.

அன்பாயிருப்பது எப்படி என்பதை ஆண் கற்க வேண்டியிருக்கும். இதயத்தை ஆசானாகவும், மனதைக் கீழ்ப்படிவுள்ள ஊழியனாகவும் இருத்துவது எப்படி என்பதை ஆண் கற்க வேண்டியிருக்கிறது. இந்த விடயங்களை ஆண் புதிதாகப் படிக்க வேண்டியிருக்க, பெண்ணோ - பிறக்கும்போதே இவற்றைத் தன்னுடன் கொண்டு வருகிறாள்.

பெண்கள் எப்போதும் ஆண்களைவிட அதிக குழந்தைத் தன்மையும், அதிக அதிசய உணர்வும் நிறைந்தவர்களாவே இருக்கிறார்கள். இருபாலாரும் எப்போதும் அறிவை நோக்கியே ஓடுகின்றனர். ஆனால், அறிவு என்பது என்ன? அறிவு என்பது அதிசய உணர்வை விட்டு விடுவதற்கான ஒரு சாதனம்தான்.

அன்பும் ஒரு ரோஜா மலர்தான். காலையில் காற்றிலும், ஒளியிலும் ஆடுகிறது. ஏதோ அது என்றென்றைக்கும் இருக்கப் போவதுபோல! அப்படி ஒரு பேரழகு நிச்சயத்தன்மை, நிஜத்தன்மை மிகவும் மென்மையாக இருந்தாலும் - காற்றுக்கும், மழைக்கும், வெயிலுக்கும் தாங்கும் வல்லமையுடன் காணப்படுகிறது. ஆனால், மாலையானதும் இதழ்கள் உதிர்ந்து விடுகின்றன. ரோஜாப்பூ மறைந்துவிட்டது. அப்படியானால், அது மாயையா என்றால், இல்லை. இதன் பொருள் வாழ்க்கையில் எல்லாமே மாறுதலுக்கு உட்பட்டதே என்பதுதான். மாறுதலானது பொருட்களைப் புதியதாக, புதுமையாகவே வைத்திருக்கிறது.

பலத்துக்குப் பல பரிமாணங்கள், அன்புக்கு அதற்கே உரிய பலம் இருக்கிறது. உதாரணமாக - கருப்பையில் பத்து மாதங்கள் ஒரு குழந்தையைச் சுமக்க எப்பேர்ப்பட்ட பலமும், தாங்குதிறனும், அன்பும் வேண்டியிருக்கிறது! எந்த ஆணாலும் இதைச் சாதிக்க முடியாது. செயற்கை கருப்பையை ஆணுக்குப் பொருத்திவிட முடியும். விஞ்ஞானம் அந்த அளவு முன்னேறிவிட்டது. ஆனால், பத்து மாதங்கள் வரை அவன் தாங்குவான் என்று நினைக்கமுடியவில்லை. வயிற்றில் குழந்தையோடு, கடலில் குதித்து விடுவான்.

எல்லாச் சட்டங்களையும், எல்லா மதங்களையும், எல்லா அரசாங்கங்களையும், எல்லாச் சமுதாயங்களையும், எல்லாக் கல்வி முறைகளையும் ஆண்கள் தான் உண்டாக்கின்றார்கள். இப்படி எல்லாமே ஆண்களால் உண்டாக்கப்பட்டுள்ள ஒரு சமுதாயத்தில் இதுவரைக்கும் பெண் தப்பிப் பிழைத்ததே ஒரு அற்புதம் தான்!.

அவனது அன்பினாலேயே இந்த அற்புதம் சாத்தியமாகிறது. ஆண் அவளை மோசமாக நடத்தியிருக்கிறான். இருந்தாலும், அவள் அவனை அன்பு செய்திருக்கிறாள். அடிமைப்படுத்தப்பட்டு, கட்டுண்ட நிலையிலும் அவள் ஒரு தாயாகி, சகோதரியாகி, மகளாகி தொடர்ந்து இருந்து வருகிறாள். *

# கட்டிளம் பருவத்தில் ஏற்படும் மனவெழுச்சி



பதினொரு வயது தொடக்கம் பதினெட்டு வயது வரையுள்ள பருவம் கட்டிளமைப் பருவம் எனப்படும். உடல், உள வளர்ச்சியில் ஏற்படும் திருப்பங்கள், மாற்றங்கள் பல்வேறு நெருக்கடிகளே இந்தப் பருவத்தில் ஏற்படுகின்றன.

நமது நாடு போன்ற வளர்முக நாடுகளில் வருமான ஏற்றத்தாழ்வுகள், கட்டுப்பாட்டுடன் கூடிய சமயப் பழக்கவழக்கங்கள், பழமையைத் தழுவும் இயல்புகள், நம்பிக்கையற்ற எதிர்காலம் போன்ற அம்சங்கள் கட்டிளமைப் பருவத்தினரின் மன எழுச்சியில் ஆழ, அகல தாக்கங்களை ஏற்படுத்தி விடுகின்றன.

இவ்வாறான நிலையில் கட்டிளமைப் பருவத்தின் மனக் கிளர்ச்சியைப் புரிந்து, சரியான பாதையில் அவர்களை வழிநடத்துவது சமூகத்தின் பொறுப்பாகும்.

கட்டிளமைப் பருவத்தில் பெண்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மிக இளம் வயதில் பூப்படைதல், உரிய வயதாகியும் பூப்படையாமல் இருக்கும் பெண்கள் எனச் சில பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர்.

இத்தகைய உணர்வுகளால் கட்டிளமைப் பருவத்தில் சிலர் ஒதுங்கி வாழவேண்டும் என்ற மனநிலை, சமூகத்தில் தம்மைப்பற்றி வித்தியாசமான எண்ணங்கள் பரவிவிடும் என்கின்ற பயம். இதன்காரணமாக சமூகத்தில் ஏற்படக்கூடிய வெறுப்பு, தாழ்வு மனப்பான்மை, மனமுறிவு உடையவராகவும் காணப்படுகின்றனர்.

இவ்வாறான எண்ணங்களையும், மன உளைச்சல்களையும் போக்கவேண்டியது சமூகத்தின் முக்கிய பணியாகும். இத்தகையவர்கள் மீது ஏற்படும் சமூகரீதியான சந்தேகங்களைக் களைவதன்மூலம், தேவையற்ற பயத்தைப் போக்கிக் கொள்ளவேண்டும்.

இன்னொருவகையில் பாலியல்ரீதியாக ஏற்படும் வளர்ச்சி. இதனால், ஏற்படும் மன எழுச்சிகள் கட்டிளம் பருவத்தினருக்குப் பல பிரச்சினைகள் ஏற்படுத்துகின்றன.

பாலியல் வளர்ச்சி உயிரினங்களில் தவிர்க்கமுடியாத இயல்பு. இதற்கு மனித இனமும் விதிவிலக்கல்ல.

கீழைத்தேச சமூகத்தில் இவை சம்பந்தமான கலந்துரையாடல்களில், நடவடிக்கைகளில், கீழ்தரமானவை என்ற எண்ணம் ஆழப்பதிந்துள்ளது.

இவை தொடர்பாக - அறிவு பூர்வமான அணுகுமுறை தேவையான ஒன்றாகும்.

சமூகம் இவற்றுக்குத் தண்டனை வழங்குகின்றபோது, இந்தப் பருவத்தினரின் மனநிலை பெரிதும் பாதிப்படைகின்றது. ஒழுக்கக் கட்டுப்பாடுகள் தண்டனைகளாக அன்றி அவர்களின் சுய கட்டுப்பாட்டு வளர்ச்சிக்குப் பயன்படும் விதத்தில் உபயோகிப்பதன்மூலம், நல்லதொரு சந்ததியைப் பெற்றுக் கொள்ளமுடியும். *

வரலாறு | பகுதி - III | மறவன்புலவு - க.சச்சிதானந்தன்



# தமிழர்களிடம் இருந்து படிப்படியாக அவர்களது நிலங்கள் பறிபோகின்றன

## ஈழத்தமிழர் மரபு வழித் தாயகப் பிரதேசங்களை சிங்களவர் அபகரித்த வரலாறு

### சிங்கள குடியேற்றம்

ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்ற 1948 ஆம் ஆண்டில் இருந்தே, இலங்கையின் இனத் தொகுப்புக்கும் நிலப்பரப்புக்கும் உள்ள தொடர்புகள் மாற்றம் பெற வேண்டும் என்ற கொள்கையுடன் கொழும்பு அரசு செயற்படத் தொடங்கிற்று.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழர் நிலப்பரப்பின் இனத்தொகுப்பு விகிதத்தை மாற்றிக்கொண்டு வருகிறது.

எல்லை மீள்வரைவுகள் மூலம் தமிழர் நிலப்பகுதிகளைச் சிங்கள நிலப்பகுதிகளுடன் இணைத்து வருகிறது.

### கல்லோயாத் திட்டம்

1952 முதல் பட்டிப்பளை ஆறு கல்லோயா எனச் சிங்களப் பெயராகியது. குறுக்கே அணைகட்டி சேனநாயக்கா சமுத்திரம் அமைக்கப் பெற்று, அந்த அணையில் வரும் நீர்ப்பாய்ச்சல் முழுவதும் சிங்களக் குடியேற்ற வாசிகளுக்குப் பயன்படக் கொழும்பு அரசு திட்டமிட்டுச் செயற்படுத்தி, 1961 இல் அக்குடியேற்றத்தைப் பேணத் தனியாக அம்பாறை (அழகியபாறை) மாவட்டமாகப்பெற்று பின்னர் அங்கு ஒரு தேர்தல் தொகுதியின் பெயரும் திகமடுல்லை எனச் சிங்கள மயமானது.

திட்டமிட்ட குடியேற்றத்துக்கு அரசின் ஆதரவு வரும்பொழுது, அரசு சார்ப்பற்ற குடியேற்றவாசிகளாக வரும் சிங்களவரின் நில ஆக்கிரமிப்புகளுக்கு அரசு அதிகாரிகள் கண்களை மூடிக்கொண்டனர்.

ஒவ்வொரு இனக்கலவரத்தின் பொழுதும் இங்குள்ள தமிழ் ஊர்கள் மீது சிங்களக் குண்டர்கள் படையெடுத்துத் தமிழர்களை விரட்டி விடுவது வழமை. இதனால், பல தமிழ்க் கிராமங்களில் சிங்களவர் வந்து குடியேறினர்.

அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் மட்டு கலவரங்களின் பொழுது அழிக்கப் பெற்ற 300க்கும் அதிகமான சைவக்கோவில்களின் விரிவான பட்டியலையும் சேத விபரங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மாவை சேனாதிராச (1993) பாராளுமன்றத்தின் முன் வைத்தார். உகந்தையில் புகழ்பெற்ற முருகன் கோவில் உள்ளது. அதில் பூசை செய்து வந்த பிராமணர் விரட்டப் பெற்று, பௌத்த குருமார் பொறுப் பேற்றுள்ளனர். பக்கத்தில் புதிதாக அமைந்த பௌத்த விகாரையிலும் அவர்களே பூசை செய்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் 1948 இல் 5வீதமாக இருந்த சிங்கள மக்கள் தொகை 1995இல் 24வீதமாக உயர்வதற்கு இந்தக் குடியேற்றத் திட்டத்தின் பங்களிப்பு முக்கியம்.

இப்பொழுது கருத்துரைத்த மீள்வரைவுத் திட்டத்தில் திகமடுல்லை தேர்தல் தொகுதி ஊவா மாகாணத்துடன் இணைக்கப் பெறும் எனக் கூறப் பெற்றது.

அதற்குச் சில தமிழர் தலைவர்களும் ஒப்புதல் கொடுத்துள்ளனர்.

### அல்லை - கந்தளாய்த் திட்டம்

கல்லோயா குடியேற்றத்திட்டம் போல உருவானதுதான் அல்லை - கந்தளாய் குடியேற்றத்திட்டம். இதுவும் 1952இல் திட்டமிடப் பெற்றது. திருகோணமலை மாவட்டத்தில் இருக்கும் இப்பகுதியில் சிங்களவர் பெருமளவில் குடியேற்றப் பெற்றனர்.

மொதிரிகிரி, லங்காபுர ஆகிய புதிய ஆட்சி மாவட்டங்கள் முன்பு தமிழ்ப பகுதியாக இருந்தவை. தம்பன் கடவை வடமத்திய மாகாணத்துடன் இணைக்கப் பெற்ற பொழுது கிழக்கில் இருந்து வடமத்தியுடன் சேர்க்கப் பெற்றவை. இங்குள்ள தமிழ்க்குடிகளைக் கலவர காலங்களில் அகற்றிச் சிங்களக் குடிகளை அமர்த்தினர்.

அதன் கிழக்கே உள்ள கந்தளாய் அல்லைப் பகுதிகளில் சிங்களவரை அரசு குடியேற்றி, கந்தளாய் என்ற புதிய ஆட்சி வட்டத்தையும் அமைத்தது.

சிங்களக் குடியேற்றம் மேலும் தொடர்ந்து, வடக்கே மொறவாவி, குமரன் கடவை ஆட்சி வட்டங்கள் சிங்களவருக்குரியதாயின.


இதே குடியேற்றம் கிழக்கே சேருவிலைக்கும் அகன்றது. சேருவிலையில் புராதன சோமாவதி சைத்திய பௌத்த கோவில் இருப்பதாக ஒரு 'கதை'யைக் கட்டி, அங்கு குடியேறிய சிங்களவருக்கு அந்த நில்தில் கலாச்சாரப் பற்று ஏற்படுமாறும் அரசு பார்த்துக் கொண்டது.

### பதவியாத் திட்டம்

வடமத்திய மாகாணத்துடன் இணை ந்த தம்பன் கடவையின் வடபகு தியே பதவியா என இன்று உளளது. இந்தப் பகுதியிலும் தொடர்ச்சியான திட்டமிட்ட சிங்களவர் குடியேற்றத்தை அரசு நடைமுறைப்படுத்தியது.

திருகோணமலை மாவட்டத்தின் வடக்கே கொக்கிளாய்க் கடனீரேரிக்குத் தெற்கே உள்ள புல்மோட்டை முழுக்கத் தமிழர் வாழ்ந்த ஊர். கனிமவள மண் கடற்கரையை ஒட்டி உண்டு. அதை ஏற்றுமதி செய்ய அமைந்த அரசு நிறுவனம் மூலம் பல்லாயிரக்கணக்கான சிங்களவர் அங்கு குடியேறினர். பதவி சிறிபுர என்ற ஆட்சி வட்டம் ஏற்பட்டது.

திருகோணமலை மாவட்டத்தின் எல்லையோரங்களில், தெற்கில் சேருவலை, மேற்கில் கந்தளாய், மொறவாவி, குமரன் கடவை, வடக்கே பதவிசிறிபுரயாவும் சிங்களவருக்கான அமைக்கப்பெற்ற ஆட்சி வட்டங்கள், பதவி சிறிபுரத்துக்குத் தென் மேற்கே பதவியா, வடமத்திய மாகாணத்தில் உள்ளது.




(தொடரும்)

---

தமிழில்வல்லையூரான்

# கொடுங்கோன்மை நிலவும் மன்றில் செங்கோலுக்கான தேவை என்ன?

**தமிழ் மக்களைப் பொறுத்தவரை இலங்கை ஆட்சிப்பீடத்தைச் சேர்ந்த ஆளும் தலைமைகள் நியாய பூர்வமாக நடந்து கொண்டது கிடையாது. அவர்கள் மீது கொடுங்கோன்மையே கட்டவிழ்த்து விடப்பட்டது.**

**எனவே, நாடாளுமன்றிலுள்ள செங்கோல் அவர்களுக்கு அர்த்தமுள்ள ஒன்றாக ஒருபோதும் இருந்ததே இல்லை.**

இலங்கை நாடாளுமன்றம் கூடும் அனைத்து நாட்களிலும் முற்பகல் 10 மணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைக்கும் மணி 5 நிமிடம். நாதம் எழுப்பியதன் பின்பு செங்கோலை வலது புறதோளில் தாங்கிக் கொண்டவராக நாடாளுமன்றசேவிதரும், அவரின் பின்னால் சபாநாயகரும் அவரது பரிவாரங்களாக நாடாளுமன்ற செயலாளர், பிரதிச்செயலாளர், உதவிச் செயலாளர் என அனைவரும் சபா மண்டபத்தினுள் உள்ளே வருவார்கள்.

இந்தக் குழுவினர் சபாமண்டபத்தின் நடுவாக சபாநாயகரின் ஆசனப்பக்கமாகச் செல்லும் பொழுது, அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் எழுந்திருப்பதோடு செங்கோலை அதன் வைப்பிடத்தில் வைத்ததன் பின்பு தத்தமக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் உட்கார்ந்து கொள்வார்கள்.

கூட்டம்முடிவடைந்த பின்பு சபாநாயகர் தமது ஆசனத்தில் இருந்து எழுந்து கொண்டதும், சேவிதர் செங்கோலைத் தூக்கிய பின்னர் சபா மண்டபத்தின் நடுவழியாக விலகிச் செல்லும் பொழுது சபாநாயகரும் அவரது பரிவாரங்களிலும், அவரின் பின்னால் சென்று சபாமண்டபத்தை விட்டு வெளியேறுவது வழமையாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் செங்கோல் கொண்டு செல்லப்படும் போது எழுந்து நின்று கௌரவப்படுத்துவது -செங்கோலுக்கு என்பது இதன் மூலம் வெளிப்படுத்தபடுகின்றது. நாடாளுமன்றம் கூடுவதற்கு செங்கோல் வைக்கப்படுவது அவசியமானது என இதன் மூலம் அறியப்படுகின்றது. ஆனால், ஆச்சரியப்படத்தக்க ஒரு காரணமாக அமைந்துள்ளது. செங்கோலைப் பற்றியோ, நாடாளுமன்றத்தின் கூட்டத்தின் போது, அது வைக்கப்பட்டிருக்வேண்டுமென்றோ நாடாளுமன்றத்தின் நிலையியல் ஆணைகளிலோ, அரசியலமைப்பு யாப்புக்களிலோ வேறு ஏதாவது ஆவணங்களிலோ குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

தற்போதைய நாடாளுமன்ற முறை ஆரம்பக்கட்டம் 1947ஆம் ஆண்டில் செங்கோல் பாவிக்கப்பட்டிருக்காததன் மூலம் செங்கோல் நாடாளுமன்றக் கூட்டத்திற்கு அவசியமான ஒன்று அல்ல என்பது தெரியவருகின்றது. செங்கோல் இல்லாத நாடாளுமன்றம் அதிகமாக மாற்றப்பட்டுள்ளன. நாடாளுமன்ற முறையினால் பின்பற்றும் நாடுகளில் நூற்றுக்கு 62 அளவில் செங்கோலை பாவிக்கின்ற அதேவேளை சில நாடுகள் செங்கோலைப் பயன்படுத்துவதில்லை.

எங்களது அயல்நாடும், உலகில் மிகப்பெரிய அளவில் நாடாளுமன்ற முறைமை பின்பற்றுகின்ற நாடுமான இந்தியாவில் நாடாளுமன்றத்தில் செங்கோலோ, சேவிதரோ இல்லை.

பெரிய பிரித்தானியாவில் செங்கோல் மிகவும் மதித்துப் பாவிக்கப்படுவது மாத்திரமல்ல, சேவிதர் பதவியும் மகாராணியின் பதவிக்குத் தக்க விதமான பொறுப்புக்களினால் அலங்கரிக்கப்பட்ட ஒரு பதவியாகும். செங்கோல் இல்லையெனில் ஊன்றுகோல் விசேடமானதாகும். ஐரோப்பியாவில், ஆசியாவில், ஆபிரிக்காவில் மிகவும் கடந்த காலங்களில் - அரசநிர்வாக காலங்களில் அரசசபைகளில் அரசர்களது வருகை மற்றும் பங்கு பற்றுதலின் அடையாளத்தினைத் தெரியப்படுத்துவதற்கு பல விதமான கொடி, பதாகைகள், செங்கோல், மற்றும் ஊன்றுகோல்கள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

அரசர்களைப் போன்றே அரசர்களது சின்னங்களுக்கு கௌரவம் செலுத்துவது வழமை. 1302ஆம் ஆண்டில், இங்கிலாந்தில் 4ஆம் ஹென்றி மன்னன் நாடாளுமன்றத்தோடு மோதலை ஏற்படுத்திக் கொண்டதன் காரணமாக அரசனது பங்கு பற்றுதலின்றி சபாநாயகரைத் தெரிவு செய்து அவரின் கீழ் நாடாளுமன்றம் கூடுவதற்கு நேர்ந்தது.

எப்படியாயினும் அரசனது சின்னத்தின் பொருட்டு அரசனது பாதுகாப்பு அதிகாரிக்கே அரசனது உத்தியோக சின்னமான பிரம்பு அல்லது ஊன்று கோல் எடுத்துக்கொண்டு நாடாளுமன்றத்திற்கு வருவதற்கு நேர்ந்தது.

இந்த உத்தியோக பூர்வச் சின்னம் இல்லாத பொழுது நாடாளுமன்றம் கூடுவதற்கு இயலாமல் போனது. இந்த இதிகாச நிகழ்ச்சிச் செயற்பாடுகளினால் பரப்பபட்டு நாடாளுமன்றங்களில் செங்கோலின் பாவனை நிகழ்ந்தது.

இலங்கைக்கு செங்கோல் அறிமுகப்படுத்தப்பட்டது. 1949ஆம் ஆண்டு தை மாதம் 31ஆம் திகதி ஆகும். பெரிய பிரித்தானியாவில் இலங்கைக்கு பூரண சுதந்திரம் வழங்கியதன் நினைவாகவே இது நிகழ்ந்தது. செங்கோலுக்கு மேலதிகமாக சபாநாயகர் ஆசனமும், பிரதமருக்கு 'கெடிலாக்' இன மோட்டார் வண்டி ஒன்றும் அன்பளிப்புச் செய்யப்பட்டது. செங்கோலின் நிர்மானம் மற்றும் திட்டம் இலங்கைத் தேசத்தவரான கலாசூரி எச்.பி.சார்ள்ஸ் என்பவரால் தீட்டப்பட்டு, அந்த திட்டத்தின் அடிப்படையில் செங்கோல் நிர்மானிக்கப்பட்டது. இங்கிலாந்தின் அரசஸ்தாபகரான, தயாரிப்பாளரான ஜெராட் கம்பனியினரால் 1949ஆம் ஆண்டு அது 2500 பவுணுக்கு விலை குறிக்கப்பட்டிருந்தது.

கருங்காலி, செங்கோல் தங்கம், வெள்ளி, செம்பு மற்றும் நீலமாணிக்கங்களினால் தயாரிக்கப்பட்டதோடு, 25 இறாத்தல் நிறையையும் உடையதாகும்.

நாடாளுமன்றத்தின் சக்தி அதிகார சபை ஆணைச்சக்கரச் சின்னமாகத் திகழ்வது செங்கோல். அப்படியாயினும், செங்கோல் இல்லாத சந்தர்ப்பங்களில் நாடாளுமன்றத்தில் நிகழ்கின்ற செயற்பாடுகள் இரத்தாவதில்லை.

1949ஆம் ஆண்டிலிருந்து ஒரு தடவை தவிர இன்று வரை நாடாளுமன்றக் கூட்டங்கள் ஆரம்பமாகியது. செங்கோலுடனேயே 1954 ஆம் ஆண்டு அந்த நாடாளுமன்றக் கூட்டத்திற்கு சேவிதரின் வருகை தாமதமாகியதால் செங்கோலினைக் கொண்டு வருவதற்கு இயலாமல் போனாலும், நாடாளுமன்றக் கூட்டம் ஆரம்பமாகியது. எப்படியாயினும் ஆறு நிமிடங்களுக்குள் செங்கோல் கொண்டு வந்து வைக்கப்பட்டது.

அந்தக் காலத்தில் இருந்த ஜனநாயக, மனிதாபிமான, நல்ல பண்பான, ஒழுக்கமான, கௌரவமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் காரணத்தினை விசேடமான குற்றமாக கணக்கில் எடுக்கவில்லை. இதற்கு மேலதிகமாக இன்று வரை இலங்கை நாடாளுமன்றத்தில் செங்கோல் நாடாளுமன்ற உறுப்பினர்களால் வெளியில் கொண்டு செல்லப்பட்ட சந்தர்ப்பங்களிலும், வெளியே கொண்டு செல்வதற்கான முயற்சிகளும் பலவாகும். அந்த நிகழ்வுகள் சில நிமிடங்களே நிகழ்ந்தன.

1996ஆம் ஆண்டு ஒரு தடவை அனில்முனசிங்க பிரதி சபாநாயகராக இருந்த பொழுது, நாடாளுமன்றக்கூட்டம் சூடு பிடித்த போது சில கணப்பொழுது அதனை ஒத்தி வைத்து, மீண்டும் கூடும் திகதியை வெளிப்படுத்துவதற்கு அவருக்கு முடியாமல் போனது. அது மாத்திரமன்றி உடனடியாக தலைமையாசனத்தில் இருந்து எழுந்து கொண்டதும் சேவிதர் செங்கோலை எடுத்துச் செல்வதற்கு தயாரானார். செங்கோலினை பலாத்காரமாக அகற்றுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முயற்சி செய்வது, தங்களது எதிர்ப்பினைக் காண்பிப்பதன் பொருட்டே தனியாக அது குழப்பும் செயற்பாடு அல்ல. எப்படியாயினும், இதற்கு முன்பு எந்தப் பிரச்சினைக்கும் செங்கோலினை அகற்றுவதற்கு அண்மித்திருக்கிறார்கள்.

அவற்றைத் தடை செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை செங்கோலினை சங்கிலியினால்கட்டி வைப்பது அல்ல. மிகவும் பொருத்தப்பாடானது. செங்கோலினை வைப்பிலிடுவது போன்ற சம்பிரதாயங்களை நிலையியல் ஆணைகளுக்கு உட்படுத்தி, அவற்றை நீதிக்குட்படுத்தி அல்லது செங்கோலை தேவையற்ற ஒன்று என்பதற்கான சம்மதத்தினைப் பெறுவதே. செங்கோல் இருந்தோ இல்லாமலோ நாடாளுமன்ற நடவடிக்கைகள் செல்லுபடியாகும் என்பது மிகவும் ஜனநாயக ரீதியான செயற்பாடு ஆகும்.

நாடாளுமன்ற மாளிகைக்கு வெளியே நாடாளுமன்றக் கூட்டத்தினை நடத்த முடியுமென்றால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரின் உத்தியோக பூர்வ அறையினுள் சத்தியப்பிரமாணம் செய்ய முடியுமென்றால், செங்கோல் பிரச்சினையை வைத்துக்கொண்டு நாடாளுமன்ற நடவடிக்கைகளை ஒத்தி வைப்பது புத்திசாலித்தனமானது அல்ல.

நன்றி:
சிங்களமொழி மூலம் -
மேஜர் ப. கருணாரத்ன

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.

**சிந்தனைக்கு**

*செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே*
*உட்பகை உற்ற குடி.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அரசின் அணுகுமுறைகளும்; சமாதானத்தின் எதிர்காலமும்!

மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் முயற்சிகள் ஒரு நெருக்கடியானதும், சிக்கலானதுமான கட்டத்தை எட்டியுள்ளது என்பதை நேற்று முன்தினம் அரசியற்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்த பின்னர் நோர்வே அரசின் சமாதான அனுசரணைக்குழுவின் முக்கியஸ்தரான எரிக்சொல்ஹெய்ம் செய்தியாளர்களிடம் தெரிவித்த கருத்துக்களினூடாக உறுதியாகியுள்ளது.

அதாவது 'இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அமைதிப் பேச்சுக்களின் மூலம் சமாதானத் தீர்வொன்றை காண்பதென்பது ஒரு கடுமையான பணியென்றும், அதனை மிகவும் கடுமையாகவும் அதிக சிரத்தையுடனும் முன்னெடுக்க வேண்டியுள்ளது' எனவும் அவர் கூறியுள்ளமையிலிருந்து நோர்வே அரசோ அல்லது சர்வதேச சமாதான ஆர்வலர்களோ எதிர்பார்த்தது போன்று இலங்கை விவகாரம் அவ்வளவு சுலபமாகத் தீர்க்கக் கூடிய ஒன்றல்ல என்பதை அவர் வெளிப்படையாகக் கூறும் நிலைக்கு வந்துள்ளார் என்பது உறுதியாகியுள்ளது.

அரசும், அரசசார்பு ஊடகங்களும் ஜுலையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும்..., ஆகஸ்ட்டில் தொடங்கும்... என்றெல்லாம் பிரசாரம் மேற்கொண்டு வருகின்ற போதிலும் எப்போது பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என இப்போது எதிர்வு கூறமுடியாது என சொல்ஹெய்ம் கூறியுள்ளதைக் கவனத்தில் கொண்டு பார்க்கையில் நோர்வே தனது அனுசரணைப் பணியைத் தொடர்வதில் ஒரு இக்கட்டான நிலையைச் சந்தித்துள்ளது என்பதை உணரக்கூடியதாக உள்ளது.

உண்மையில் இந்த நெருக்கடி நிலையானது புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தரப்பின் நேர்மையற்றதும் சுயநல அரசியல் அபிலாஷைகளை இலக்குவைத்ததும், சமாதான முயற்சிகள் நியாயமான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற இலட்சியத்தில் விருப்பார்வம் அற்றதுமான நடவடிக்கைகளால் ஏற்பட்ட ஒன்றேயாகும்.

தமிழர்தரப்பு அதாவது தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப்புலிகள் தரப்பானது புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத்த உடன்பாடுகளை மதித்து சமாதானத்தை முன்னெடுப்பதில் விசுவாசமான பங்களிப்பை, சர்வதேச சமூகம் பாராட்டும் வகையில் கடந்த இரண்டரை ஆண்டுகளாகச் செய்து வந்த போதிலும், முன்னைய ரணில் தலைமையிலான அரசும் சரி, இப்போதைய ஜனாதிபதி தலைமையலான அரசும் சரி அந்தளவுக்கு சமாதான முன்னெடுப்புக்களில் ஆத்மார்த்தமான ஈடுபாட்டை கொண்டிருக்கவில்லை என்ற உண்மையை உலகம் உணர்ந்து கொள்ளும் கட்டம் இப்போது உருவாகியுள்ளது.

புதிய அரசு பலவீனமான நிலையில் அதாவது அறுதிப் பெரும்பான்மை வலுவற்ற நிலையில் சமாதானத்தை அதன் சகல அம்சங்களிலும் எதிர்க்கும் இனவாதக் கட்சிகளின் ஆதரவில், அரசாங்கத்தைக் கொண்டு நடத்த வேண்டிய நிலையில், அவர்களுடன் முரண்படாமல், அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்து கொண்டு அதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டிய நிலையில் உள்ள வேளையில் அதற்குச் சமாந்தரமாக சமாதான முயற்சி நகர்வுகளை போலிதனமான விருப்பத்துடனேனும் மேற்கொள்வது என்பது சாத்தியமற்ற விடயமாகும்.

நோர்வே அரசை மீண்டும் சமாதானத்திற்கான அனுசரணை யாளராக சந்திரிகா அழைக்கத் தீர்மானித்து, அழைப்பு விடுத்த நிகழ்வானது அவரது தோழமைக் கட்சிகளால் - குறிப்பாக ஜே.வி.பி யினரால் வெளிப்படையான எதிர்ப்புக் குள்ளான போதே புதிய அரசின் சமாதான முன்னெடுப்பின் எதிர்காலம் எத்தகைய இழுபறிகளுக்குள்ளாகும் என்பது தெளிவாகிவிட்டது.

அதாவது புதிய அரசுக்குள் சமாதான முயற்சிகள் தொடர்பான ஒருமித்த கருத்தியல் நிலைப்பாடு இல்லை... அப்படி ஒன்று ஏற்படும் சாத்தியமும் கிடையாது என்ற அரசியல் யதார்த்த நிலையானது சமாதானத்திற்கான அரசின் அழைப்பினை ஒரு சம்பிரதாய பூர்வமான - உணர்வுபூர்வமற்ற அறைகூவலாகவே உணரவைத்தது.

புதிய அரசு பதவியேற்று இன்னும் மூன்று முழுமாதங்கள் முடியாத நிலையில், நாடாளுமன்றில் தனது ஸ்திரத்தன்மையை நிரூபிக்கப்படாது ஈடுபட்டு வரும் சூழலில், மாகாணசபைத் தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல்களின் போது சமாதானம் தொடர்பாக ஐ.ம.சுமுன்னணியினர் கொண்டிருந்த நிலைப்பாடு இப்போது மூன்று மாதங்களுள் மாகாணசபைத் தேர்தலின் போது மாறுவதென்பது அரசின் கொள்கை நிலைப்பாட்டின் ஸ்திரமற்ற தன்மையை வெளிப்படுத்தும். இது ஐ.தே.க கட்சிக் குச் சார்பாக அமைந்துவிடும் அபாயம் ஏற்படும் என அரசு அஞ்சவும் கூடும்.


எனினும் கூட சமாதானத்தை ஏற்படுத்தும் இலக்கில் அரசின் கவனம் ஒருபோதுமே குவிமையம் கொண்டிருக்கவில்லை என்பதற்கு அதன் கடந்த மூன்று மாதகாலச் செயற்பாடுகளே உறுதியானசான்று.

கிழக்கில் கருணா விவகாரத்தை அரசும், அரச படைகளும் கையாண்ட, இன்னமும் கையாளுகின்ற விதம் அப்பட்டமான யுத்தநிறுத்த உடன்பாட்டு மீறலாக இருக்கையில், சமாதானம் பற்றிப் பேசும் யோக்கியத்தை அரசுக்கோ ஜனாதிபதிக்கோ கிடையாது என்பதே உண்மை.

விடுதலைப்புலிகளின் பொறுமையை அரசு பலவீனமாகக் கருதி, சமாதான முயற்சிகளை ஏமாற்றுத் தந்திரோபாயமாக மாற்ற, அரசோ அல்லது ஜனாதிபதியோ நினைக்க நேரிட்டால் அதன் விளைவு பாரதூரமானதாகவே இருக்கும் என்பதே உண்மையானதாகும்.

உண்மையிற் சமாதானச் சூழல் நீடிப்பதென்பது அரசின் நேர்மையான அணுகுமுறையிற்தான் உள்ளது. அதற்கான சூழ்நிலையை தக்கவைக்க வேண்டிய பொறுப்பும் அரசின் கைகளில் தான் உள்ளது. இதனை அரசியற்துறைப் பொறுப்பாளர் சொல்ல வேண்டிய சமயத்தில், சொல்லவேண்டியவர்களிடம், சொல்ல வேண்டிய முறையில் சொல்லியுள்ளார் என்றே கூறவேண்டும்.

## நாடும் நடப்பும்



### விளையாட்டு வீரர்களை

# தொடர்சியான பயிற்சிகள் மூலம் சர்வதேசதரத்துக்கு உயர்த்துவோம்

### விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா

(வடமராட்சி கிழக்கு)

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே எதிரியின் அச்சுறுத்தலுக்கும், கெடுபிடிகளுக்கும் மத்தியிலேயே இன்று விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றுவருகின்றன. இன்று இந்த விளையாட்டு நிகழ்வு எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சுதந்திரமாக நடைபெற்றதைக்கண்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன் என தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கழகங்களுக்கு இடையிலான தடகள விளையாட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஆண்டுக்கு ஒரு தடவை என்றில்லாமல் தொடர்ச்சியான பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலமே, நாம் சர்வதேச மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றக்கூடிய நிலை ஏற்படும். எமது விளையாட்டுத்துறையினை சர்வதேச தரத்திற்குக்கொண்டுவரும் நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டுவருகின்றோம். சர்வதேச பயிற்றுவிப்பாளர்களை அழைத்து எமது வீர, வீராங்கனைகளுக்கு பயிற்சி அளித்துவருகின்றோம்.

இந்த விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிய பல வீரர்கள் மாவட்ட, மாகாண தேசியப் போட்டிகளில் பங்குபற்றி யமையை அறிந்து, நான் சந்தோசப்படுகின்றேன். கிராமப்புறங் களில் இருக்கின்ற திறமையான வீரர்களை வெளிக்கொண்டு வருவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். உதாரணமாக சுசந்திகா ஜெயசிங்க என்ற பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வீராங்கனை - 200 மீற்றர், 400 மீற்றர் ஓட்டங்களில் சர்வதேச ரீதியில் தங்கப்பதக்கங்களை வென்று, பெருமை தேடிக்கொடுத்துள்ளார். இவர் கிராமப்புறத்தில் வளர்ந்துவந்தவர். இவரின் முயற்சிக்கு பல இடையூறுகள் வந்தபோதும், அவர் எதிர்நீச்சல் போட்டு இன்று சாதனைபடைத்து வருகின்றார்.

எமது பிரதேசத்தின் எட்டு மாவட்டங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட வீரர்களைக்கொண்ட வலைப்பந்தாட்ட அணி வெளிநாடுகளில் தொடர்ச்சியாக 18 போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

எமது தாயகத்திற்கு திடகாத்திரமுள்ள இளைஞர், யுவதிகள் தேவையாக உள்ளனர். இவர்களை விளையாட்டுத்துறையின் மூலமே உருவாக்கமுடியும்.

எமது அமைப்பு பல நிர்வாக கட்டமைப்புக்களை ஏற்படுத்தி வருகிறது. அதில் விளையாட்டுத்துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். எமது பிரதேசத்தில உள்ள எந்த ஒரு இடத்திலும் விளையாட்டுத்துறையை முன்னேறுவதற்கு நாம் உதவி அளிக்கத்தயாராக உள்ளோம்.

நாம் தொடர்ச்சியான, முறையான பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலமே சர்வதேச தரத்திற்கு வரமுடியும். ஏன் ஆசியாவிலேயே முதல் இடத்தையும் பெறமுடியும்.

மேலும் வடக்கு - கிழக்கு பிரதேசம் பூரண சுதந்திரம் அடையும்போதே நாம் விளையாட்டுத்துறையில் முழுமையாக பிரகாசிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (122)

# பட்டதாரிகளின் சாத்வீகப் போராட்டம் நேற்று பொலிஸாரால் கலைக்கப்பட்டது

(கொழும்பு)

இலங்கை வங்கியின் பட்டதாரி பயிலுநர்கள் தாம் பணி நீக்கம் செய்யப்பட்டமைக்கு எதிராக நடத்திய சாத்வீகப் போராட்டம் நேற்று பொலிஸாரால் பலப்பிரயோகம் மூலம் கலைக்கப்பட்டுள்ளது. கோட்டை இலங்கை வங்கியின் பிரதான அலுவலகம் முன்பாக பணிநீக்கம் செய்யப்பட்ட பட்டதாரிகள் கடந்த சில நாட்களாக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இவர்கள் நேற்று சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்த பகுதிக்குசென்ற பொலிஸார் - அவர்கள் மீது தடியடிப்பிரயோகம் மேற்கொண்டதோடு, அவர்களின் உடமைகளையும் பலவந்தமாக அப்புறப்படுத்தியுள்ளனர்.

பட்டதாரிகள் மீது பொலிஸார் மேற்கொண்ட இந்த அத்துமீறல் சமபவத்தால் பாதிக்கப்பட்ட பலர் வீதியோரத்தில் கண்ணீரோடு தமது மனக்குமுறல்களை ஊடகவியலாளர்களிடம் வெளிப்படுத்தினர்.

இவர்கள் அப்புறப்படுத்தப்பட்ட முறை தொடர்பில் பொலிஸாரிடம் கருத்தறிய முற்பட்டபோது - தாம் இது தொடர்பாக எந்த கருத்தினையும் வெளியிடமுடியாது என்று தெரிவித்தனர்.

### விவசாய கால்நடை திணைக்கள

# வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் கொள்வனவுக்கு கடன்

விவசாயக் கால்நடை ஆகிய திணைக்களங்களில் வெளிக்கள உத்தியோகத்தர்களாக கடமைபுரிபவர்களுக்கு மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு கடன் வழங்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம் இந்தத் திணைக்களங்களில் உள்ள 12 ஆயிரத்து 220 வெளிக்கள உத்தியோகத்தர்கள் நன்மையடைய வுள்ளனர்.

இந்தக்கடன் திட்டத்திற்கென விவசாயிகள் நம்பிக்கை நிதியத்தில் இருந்து பெறப்பட்டுள்ள 10 கோடி ரூபா ஒதுக்கப் பட்டுள்ளதாக விவசாயக் கால்நடை காணி நீர்ப்பாசன அமைசசர் அநுரா திஸநாயக்க தெரிவித்தார்.

ஒவ்வொரு வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும, 4 அரை சதவீத வருட வட்டியுடன் 80 ஆயிரம் கடனாக வழங்கப்படவுள்ளது. முதற்கட்டமாக எதிர்வரும் ஜூலை மாதத்தில் 500 மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன. கஷ்டப்பிரதேசங்களில் கடமைபுரிவோருக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. (122)

# முல்லைத்தீவு இலங்கை வங்கிக் கிளையை 3 மணிவரை சேவையாற்றுமாறு வேண்டுகோள்

முல்லைத்தீவு இலங்கை வங்கியை மாலை 3 மணிவரை திறந்துவைத்து சேவையாற்றுமாறு முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை வங்கி வாரத்தில் 5 நாட்கள் செயற்பட்டபோதும், பிற்பகல் ஒரு மணியுடன் தமது சேவையை நிறைவு செய்வதால், தூர இடத்தில் இருந்து வருகைதரும் மக்கள் தமது தேவைகளைப் பூர்த்திசெய்யமுடியாத அவலநிலைக்கு உள்ளாவதாக முல்லை மாவட்டப் பிரதேச மக்கள் அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவந்ததை அடுத்தே இந்த வேண்டுகோள் - வங்கி நிர்வாகத்திடம் விடுக்கப்பட்டுள்ளது. (122)

# நீர்த்தாங்கியில் ஏறிநின்று போராட்டம்

திருகோணமலை கந்தளாய் வைத்தியசாலையில் இரண்டு சுகாதார ஊழியர்கள் நீர்த்தாங்கியின்மீது ஏறி நின்று போராட்டம் ஒன்றை நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த மாதம் வேலையிலிருந்து நீக்கப்பட்ட வைத்தியசாலையன் சமையல் ஊழியர் அப்புஹாமி என்பவர் தனது பணி நீக்கத்தை இரத்துச்செய்து, தன்னை மீண்டும் பணிக்கு அமர்த்த வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்து இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். இவருக்கு ஆதரவாக மற்றுமொரு சுகாதார ஊழியரும் இவருடன் இந்தப் போராட்டத்தில் இணைந்துள்ளதாக கூறப்படுகின்றது.

# அரசின் அனைத்து வியூகங்களுக்கும் முகம் கொடுக்கத் தயாராகும் தமிழ்த் தலைமை

**சிங்கள-பௌத்த பேரினவாதத்துக்கு ஆதரவாகவும், தமிழரின் உரிமைக்கும் தேசிய நலனுக்கும் எதிராகவும் தாம் கொண்டுள்ள நிலைப் பாட்டிலிருந்து, இந்த சிங்களக் கட்சிகள் என்றுமே தடம் புரண்ட தில்லை. எத்தனை வித்தியாசமான அரி தாரங்களைப் பூசி, விதம் விதமான பாத்திரங்களை ஏற்று, இந்தச் சிங்களக் கட்சிகள் நடித்தாலும், தங்களது அடிப்படையான சிங்கள-பௌதத பேரினவாதக் கொள்கையிலி ருந்து இவைகள் என்றுமே மாறியதில்லை.**

'இலங்கைத்தீவில் சமாதானத்துக்காக எடுக்கப்படும் முயற்சிகளையும்விட, சமாதானத்தைக் குழப்புவதற்காக எடுக்கப்படும் முயற்சிகளே முன்னணியில் இருக்கின்றன' என்ற சுடுகின்ற உண்மையின் யதார்த்தத்தை நாம் இப்போது காணக்கூடியதாக உள்ளது.





சிங்களத் தலைமைகள் யாவும் தமிழர் நலனுக்கும், உரிமைக்கும், தமிழ்தேசியத்துக்கு எதிராகவும், எதிரிகளாகவும் எப்பொழுதுமே செயற பட்டு வந்துள்ளதையும் நாம் அறிவோம். ஆனால், தற்போதைய நிலவரம் இன்னுமொரு முக்கியமான உண்மையையும் வெளிக்கொண்டு வந்துள்ளது.

கடந்த 55 ஆண்டு கால அரசியல் வரலாற்றில் - மாறிமாறி அரசமைத்த சிங்களக் கட்சிகள் யாவும், தமிழர் விரோத எண்ணங்களைச் செயற்படுத்துவதிலேயே முனைந்திருநதன.

அதேவேளை, எதிர்க்கட்சியாகச் செயற்பட்ட சிங்களக் கட்சிகள், தமிழர் நலனுக்கு ஆதரவாகச் செயற்படும் தோற்றத்தையே காட்டி வந்துள்ளன. சிங்களக் கட்சிகளின் ஆட்சி கைமாறும் போதும், அவை தொடாநது இதே 'சிங்கள அரசியல் நிலைப்பாட்டையே' கடைப்பிடித்து வந்தன.

அதாவது, ஆட்சி .அமைக்கும் கட்சி - தமிழர் விரோத·செயற்பாடுகளையும், எதிர்க்கட்சி தமிழர் ஆதரவுக் கருத்துக்களையும் (மட்டும்) வெளிப்படுத்தி வருவதில், எந்தவித மாற்றமும் அண்மைக் காலம் வரை ஏற்படடிருக்கவில்லை.

ஆளும் சிங்களக்கட்சி -அது எதுவாக இருந்தாலும், தமிழர் நலனுக்கு எதிர் சிங்கள எதிர்க்கட்சி அது எதுவாக இருந்தாலும் - அப்போதைக்கு அது தமிழர் நலனுக்கு ஆதரவான கருத்துக்களைத் தெரிவிக்கும் கட்சி, அண்மைக்காலத்தில் சிறிது மாற்றம் ஏற்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயககம் பல இராணுவ வெற்றிகளை அடைந்து, படைத்தரப்புக்கு நிகராக ஓர் இராணுவச்சமநிலை ஏற்படுத்தியதும் நிலைமை மாறியது.

ஈழத்தமிழர் நலன் குறித்தும், சமாதானம் குறித்தும் பேசவேண்டிய கட்டாயம் -ஆளுகின்ற சிங்கள அரசுக்கு ஏற்பட்டது. இந்தவேளையில், சிங்கள அரசு தமிழர் நலன் குறித்துப் பேசுகின்ற அரசாகவும், சிங்கள எதிர்க்கட்சி - தமிழர் நலனுக்கு எதிராகச் செயற்படுகின்ற சக்தியாகவும் மாறுகின்ற தோற்றம் ஏற்பட்டது.

இந்த வெளிப்படைத் தோற்ற மாறுதல், உண்மையில் சிங்கள பௌத்த பேரினவாதக் கொள்கைக்கும், செயற்பாட்டிற்கும் நன்மை செய்வதாகவே அமைந்தது. அடிப்படையான சிங்கள் பேரினவாதக் கருத்துக்களில் மாற்றம் ஏற்பட்டு விட்டது என்றும் - தமிழீழ மக்களுக்கு ஒரு நியாயமான, நிரந்தரமான, கௌரவமான தீர்வு விரைவில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஊடே கிடைத்து விடும் என்றும் - உள்ளூரிலும், வெளியூரிலும் நம்பிக்கை பலமாக எழுந்தது.

அதன் அடிப்படையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஒரு சமாதானத் தேவதையாகவும், பின்னர் ரணில் விக்கிரமசிங்க ஒரு சமாதானத் தாதுவராகவும் பாத்திர மேற்று நடித்தார்கள்.

சமாதானத்துக்கான மயக்கம் ஒன்றில் - மக்களும், மற்றவர்களும் திளைத்திருக்கையில், காலம் பயனின்றிக் கடந்து சென்றது.

இந்த ஆண்டு சந்திரிகாவின் அரசியல் கூட்டணி - இறுதிப் பெரும்பான்மை இன்றி ஆட்சி அமைதத போது, சமாதான முன்னெடுப்புக்கள் குறித்துச் சந்தேகம் ஏற்பட்டதும், அதற்கிணங்க பேசசுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகாமல் இழுத்தடிக்கப்படுவதும் கண்கூடாக நடைபெற்றன.

ஜனாதிபதி சந்திரிகாவின் சமாதானத் தோற்றம் குறித்து, நம்பிகைகை ஏற்படாமல் போனதுக்கு அவரின் கடந்தகால தமிழர் விரோத செயற்பாடுகள் காரணமாக அமைந்தது மட்டுமல்லாது, இன்னொரு காரணமும் சந்திரிகாவுக்கு எதிராக இருந்தது.

அது ரணில் விக்கிரமசிங்க அவர்களின் சமாதான முன்னெடுப்புகளின் மீது, சராசரி மக்கள் கொண்ட நம்பிக்கையாகும். முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கட்சியும், அதன் ஆட்சியும் - தமிழரின் தேசியப் பிரச்சினையையும், அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளையும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஊடாகத் தீர்த்து வைக்கும் என்று பெரும்பான்மையோர் இயல்பாக நம்பியிருந்தமை இதற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

கடந்த 55 ஆண்டு கால வரலாற்றில் ஆட்சி அமைத்த சிங்களக் கட்சிகளும் - அந்த காலகட்டத்தில் எதிர்க்கட்சிகளாக செயற்பட்ட சிங்களக் கட்சிகளும், அடிப்படையில் தமிழர் நலனுக்கு எதிரான சிங்கள-பௌத்த பேரினவாதக் கட்சிகளே.

தாங்கள் சார்ந்து நிற்கின்ற கட்சிகளின் அதிகாரத்துக்காக, அவை பிரிந்து நின்று மோதினாலும் -அவை தங்கள் அடிப்படைக் கொள்கையில் ஒற்றுமையாகவே இருந்து வந்துள்ளன.

சிங்கள-பௌத்த பேரினவாதத்துக்கு ஆதரவாகவும், தமிழரின் உரிமைக்கும் தேசிய நலனுக்கும் எதிராகவும் தாம் கொண்டுள்ள நிலைப்பாட்டிலிருந்து, இந்த சிங்களக் கட்சிகள் என்றுமே தடம் புரண்டதில்லை.

எத்தனை வித்தியாசமான அரிதாரங்களைப் பூசி, விதம் விதமான பாத்திரங்களை ஏற்று, இந்தச் சிங்களக் கட்சிகள் நடித்தாலும், தங்களது அடிப்படையான சிங்கள-பௌத்த பேரினவாதக் கொள்கையிலிருந்து இவைகள் என்றுமே மாறியதில்லை.

இந்தக் கசப்பான உண்மையை நாம் நெடுங்காலமாகவே வலியுறுத்தி வந்தமையையும், தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதையும் மக்கள் அறிவார்கள்.

கடந்த சில வாரங்களில் வெளிவந்துள்ள சில உண்மைத் தகவல்கள் எம்முடைய தர்க்கத்திற்கு வலுவூட்டுவதாகவே அமைந்துள்ளன.

இலங்கையின் சிங்களத் தலைமைகள் - 'தமிழினத்துக்கு நீதியான, நியாயமான, நிரந்தரமான, கௌரவமான தீர்வை சமாதானப் பேச்சுக்கள் ஊடாக தரமாட்டது' என்பதை, கடந்த வாரச் செய்திகள் நிரூபித்து நிற்கின்றன.

பிரதேசவாதத்தை முன்னிறுத்தித் தமிழ்த் தேசியக் கோட்பாட்டை மழுங்கடிப்பதற்கும், பொதுத்தேர்தல் நேரத்தில் தமிழினத்தின் ஏகோபித்த இறையாணையை சிதறடிக்கவும், கருணா என்ற துரோக சக்தி பயன்படுததப்பட்டது.

கருணாவின் துரோகத்துக்கு துணையாகவும், உந்து சக்தியாகவும் இருந்து உதவியதில், சிங்களத்தின் இரண்டு தலைமைகளுமே காரணமாக இருந்திருக்கின்றன என்ற உண்மை இப்போது வெளிப்படையாகியுள்ளது.

சந்திரிகாவும், ரணில் விக்கிரமசிங்கவும் சிங்கள -பௌத்த பேரினவாத அடிப்படையின் இரண்டு தோற்றங்களே. இந்த இரண்டு தோற்றங்களின் வித்தியாசமான வெளிக்காட்டலின் ஊடாகத்தான், சிங்கள - பௌத்தப் பேரின வாதம் உறுதியாகவும், பலமாகவும் உயிர் வாழ்ந்து வருகின்றது.

தமக்குள் பதவிக்காகவும்-அதிகாரத்திற்காகவும்-அரசியல் எதிர்காலத்திற்காகவும் இவர்கள் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டாலும், சிங்கள-பௌதத பேரின வாதத்தின் நலனுக்காகவும், அதன் ஆளுமைக்காகவும் எதையும் செய்வதற்கு இவர்கள் தயங்கியதில்லை.

அதனைத்தான் கருணா விவகாரத்தில் சந்திரிகாவும் ரணில் விக்கிரமசிங்கவும் - செய்திருக்கின்றார்கள். அந்த வகையில், இந்த வேடங்கள் இவர்களுக்கு மிகவும் பொருந்தியே அமைந்துள்ளன, அமைந்தும் வருகின்றன.

கருணாவின் விவகாரத்தில், ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் கூட்டணியும், சந்திரிகாவின் தற்போதைய அரசும், கருணாவின் தமிழினத் துரோகத்திற்கு துணைபோயிருக்கின்றன.

பிரதேசவாதத்தை முன்னிறுத்தியும், தமிழ்த் தேசியத்தின் இறையாண்மையைத் தடுப்பதற்கும் முயன்ற கருணாவின் முயற்சிகள் - தமிழீழத் தேசியத் தலைமையின் நுட்பமான தீர்க்கதரிசனமான அரசியல் -இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சுக்குநூறாயின.

தமிழீழத் தேசியத் தலைமை - தகுந்த காரணங்களுக்காகப் பொறுமை காத்து, தக்கநேரத்தில் தகுந்த நடவடிக்கைகளை எடுத்தது. அதன் மூலம் கருணா என்கின்ற தமிழ்த்துரோக சக்தி முன்னெடுத்த பிரதேச வாதம் தோற்கடிக்கப்பட்டது மட்டுமல்லாது, பொதுத்தேர்தல் சமயத்தில் தமிழ் மக்கள் தங்களது இறையாணையை தங்கு தடையில்லாமல் வழங்குவதற்கும் வழி வகுத்தது.

தமிழீழத் தேசியத் தலைமையின் பொறுப்புணர்வான இந்த நடவடிக்கை, சமாதானப் பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுவதற்கும், யுத்த நிறுத்தம் தொடர்ந்து பேணப்படுவதற்கும் அடித்தளமாக அமைந்தது.

ஒரு நெருக்கடியான - சலசலப்பான சந்தர்ப்பத்தில் தமிழீழ தேசியத் தலைமை ஒரேயொரு காய் நகர்த்தலின் மூலம், பல தடைகளை வெட்டி எறிந்தமையை இந்த வேளையில் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எந்த ஒரு விடுதலைப் போராட்டத்திலும் சமாதான காலம் என்பது - அந்த விடுதலைப் போராட்டத்திலும், அந்த விடுதலைப்போராட்டத்துக்கு ஓர் அச்சுறுத்தலாகவும் இருந்துள்ளது என்பதை, நாம் வரலாற்றில் இருந்து படிக்க முடிகின்றது.

இப்படிப்பட்ட காலத்தில்தான் வெளிச்சக்திகள் ஊடுருவுகின்றன. சமாதானக் காலம் காட்டுகின்ற போலியான அமைதித்தோற்றத்தால், மக்கள் மனநிலையிலும் தளம்பல் நிலை உருவாகும்.

இப்படிப்பட்ட நிலையில் ஒரு விடுதலை இயக்கத்தையும், அதன் போராட்டத்தின் உறுதியையும் கட்டிக்காத்து, எழுச்சி கொள்ள வைப்பதற்கு ஒரு மகத்தான தலைமை வேண்டும்.

அப்படிப்பட்ட தலைமை ஒன்று இந்த தமிழினத்துக்குக் கிடைத்துள்ளது. உலக வரலாற்றில் மிக மிக அரிதாகவே கிடைக்கப் பெறுகின்ற இத்தகைய தலைமை -இன்று ஈழத் தமிழினத்துக்குக் கிடைத்திருப்பதனால் தான் துரோகம், கை விடுகை, இழப்பு போன்றவற்றை எமது விடுதலைப் போராட்டம் சந்தித்திருந்த போதிலும், மீண்டும் எழுச்சியுடனும், பலத்துடனும் எழுந்து நிற்கமுடிகின்றது.

போர்க்காலத்தில் மட்டுமல்ல, சமாதானக் காலத்திலும் கடுமையான அசசுறுத்தல்களையும், ஆபத்துக்களையும் தமிழீழ விடுதலைப்போராட்டம் பலமுறை சந்தித்திருந்த போதிலும், மீண்டும் எழுச்சியுடனும், பலத்துடனும் எழுந்து நிற்கமுடிகின்றது.

தமிழீழ தேசியத்தலைவர் பிரபாகரன் - இவற்றை மதிநுட்பத்துடனும், தீர்க்கதரிசனத்துடனும் எதிர்கொண்டு, தக்க வழிகளைக் கையாண்டு வருகின்றார். இத்தகைய தலைமையின் கீழ், தமிழினம் இனி ஒருபோதும் ஏமாறவோ, தோற்கவோ தயாராக இல்லை என்ற நிதர்சனத்தை, வரும் காலம் நிரூபித்துக்காட்டும்.

இன்று இலங்கைத்தீவில் பல முக்கியமான விடயங்கள் தேக்க நிலையை அடைந்திருப்பதனை காணுகின்றோம். சமாதானப் பேச்சு வார்த்தைகள் தடைப்பட்டு போயுள்ளன. நாடாளுமன்ற நடவடிக்கைகளும் உரியமுறையில் நடைபெறுவதில்லை.

சமாதானப் பேச்சுக்களை நிபந்தனையாகக் கொண்ட நிதி உதவியும் வந்துசேர முடியாமல் இருக்கின்றது. இவை காரணமாக நாட்டின் பொருளாதாரமும் வீழ்ச்சி கண்டு வருகின்றது. சுமார் ஓராண்டுக்கு முன்னர் நிதி உதவி வழங்கும் நாடுகள் வழங்குவதாக உறுதியளித்த 4.5 அமெரிக்க பில்லியன் டொலர்கள் இந்த ஆண்டு ஜுன் மாத ஆரம்பத்தில் நடைபெற்ற BRUSELLS கூட்டத்தின்போதும் கையளிக்கப்படவில்லை. காரணம், நாம் முன்னர் கூறியபடி பேச்சுவார்த்தை இல்லையென்றால் நிதி உதவியும் இல்லை என்ற நிப்பந்தனைதான்.

நிலைமை இவ்வாறு மிக மோசமாக இருக்கையில், இதனை இன்னும் அவல நிலைக்குக்கொண்டு செல்லும் முயற்சிகளில்தான் இலங்கை அரசு இறங்கியுள்ளது.

கருணா விவகாரத்தில் அரசு மேற்கொண்ட சமாதான விரோத நடவடிக்கைகளோடு, அரச ஊடகங்கள் மேற்கொண்ட விசமத்தனமான பொய்ப் பிரசாரங்களும் நிலைமையை மிகவும் சீர்குலைத்துள்ளன. இவை யாவும் அரசின் நம்பகத் தன்மையை கேள்விக்குறியாக்கி உள்ளன.

அத்துடன், கருணா விவகாரத்தை பயன்படுத்தி, இராணுவம் மேற்கொண்டு வருகின்ற அராஜக நடவடிக்கைகள் - சமாதானப் பேச்சு வார்த்தைகளின் ஆணிவேரையே அறுத்து வருகின்றன.

கிழக்கில் நடைபெற்று வருகின்ற கொலைகளும், மனித உரிமை மீறல்களும, கொலைப் பயமுறுத்தல்களும் இன்று இராணுவத்தின் அனுசரணையுடனேயே நடைபெற்று வருகின்றன.

கருணாவின் துரோகம் நசுக்கப்பட்டு - அவரும், அவரைச் சேர்ந்த சிலரும் தப்பியோடிவிட்ட பின்பு இன்று கிழக்கில் விரல் விட்டு எண்ணக்கூடிய நபர்களே கருணாவின் குழுவில் இருப்பதாக நம்பகமாகத் தெரிய வந்துள்ளது.

ஆயுத பலமும், ஆட்பலமும், மனோபலமும் இல்லாத இந்தச் சிறிய துரோகக் குழுவுக்கு, இராணுவமே ஆதரவு கொடுத்து, அதனை முன்னிறுத்தி அராஜகச் செயல்களை புரிந்து வருவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அரசினதும், இராணுவத்தினதும் இத்தகைய நாசகார, நயவஞ்சக செயல்கள் - சமாதானப் பேச்சு வார்த்தைகளைத் தடுத்து நிறுத்துவது மட்டுமல்லாது, போர்நிறுத்த உடன்படிக்கைக்கும் ஆப்பு வைத்து உடைக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா மீதும், அவரது அரசு மீதும் எவரும் நம்பிக்கை கொள்ள முடியாதவாறுதான் காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

தன்னுடைய அரசியல் எதிர்காலத்துக்கு நல்லதொரு வாய்ப்புத் தோன்றாத நிலையில், தன்னுடைய தற்போதைய அரசு வலுவில்லாமல் இருக்கும் நிலையில் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஒரு சாட்டுக்காகவாவது ஆரம்பிக்க முடியாத நிலையில் சந்திரிகாவுக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கின்றது.

**கருணா விவகாரத்தில் அரசு மேற்கொண்ட சமாதான விரோத நடவடிக்கைகளோடு, அரச ஊடகங்கள் மேற்கொண்ட விசமத்தனமான பொய்ப்பிர சாரங்களும் நிலைமையை மிகவும் சீர்குலைத்துள்ளன. இவை யாவும் அரசின் நம்பகத் தன்மையை கேள்விக்குறியாக்கி உள்ளன. அத்துடன், கருணா விவகாரத்தை பயன்படுத்தி, இராணுவம் மேற்கொண்டு வருகின்ற அராஜக நடவடிக்கைகள் - சமாதானப் பேச்சு வார்த்தைகளின் ஆணி வேரையே அறுத்து வருகின்றன.**

மீண்டும் ஒரு யுத்தத்தை தமிழீழ மக்கள் மீது வலிந்து ஆரம்பிப்பதுதான் சந்திரிகாவுக்கு தெரிந்த ஒரேயொரு வழியாக உள்ளது.

ஒரு யுத்தத்தை ஆரம்பிப்பதன் மூலம் சிங்கள மக்களைத் திசை திருப்பி, தனது அரசியல் எதிர்காலதத்துக்கு புதிய அத்திவாரம் ஒன்றை இடுவதோடு மட்டுமல்லாது, தன்னுடைய தமிழின விரோதக் கொள்கையைச் செயல்படுத்துகின்ற இரட்டைத் திருப்தியும் இதனால் அவருக்கு ஏற்படக்கூடும்.

ஆனால், தமிழீழத் தேசியத் தலைமையும், தமிழீழமும் இவற்றிற்கு முகம் கொடுக்கத் தயாராகத்தான் இருக்கின்றது. புதிய அலை பொங்கி எழுகின்றபோது, அதன் எழுச்சிக்குத் தோள் கொடுக்க உலக தமிழினம் இப்போதே தயாராக வேண்டும். ◆

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# அமெரிக்க விமானங்கள் தாக்குதல்
# பலூஜா நகரில் நால்வர் உயிரிழப்பு

(பக்தாத்)

ஈராக்கின் பலூஜா நகரிலுள்ள வீடொன றின் மீது அமெரிக்க விமானப் படையினர் நடத்திய தாக்குதலில் நால்வர் கொல்லப் பட்டதுடன் பத்துப்பேர் காயமடைந்த னர்.

தாக்குதல் நடத்தப்பட்ட வீட்டினுள் அபு முசாப் அல் - சர்காவியின் தலைமையின் கீழ் இயங்கும் நான்கு உறுப்பினர்கள் இருந்ததாகவும், அதனாலேயே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அமெரிக்க இராணு வம் தெரிவித்தது.

அமெரிக்க விமானங்களால் தாக்குத லுக்குள்ளான வீடு முற்றாகச் சேதமடைந்து விட்டதாகவும், தாக்குதலுக்குப் பின்னர் வீடு கிடந்த இடத்தில் பாரிய குழி ஒன்று காட்சியளிப்பதாகவும், உள்ளூர்வாசி ஒரு வர் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலானது மிகவும் துல்லி யமாக நடத்தப்பட்டதாகவும், பயங்கர வாதிகளை அழித்தொழிப்பதற்கு அமெரிக்க கூட்டணிப்படைகளுடன் ஈராக் படை களும் இணைந்து செயற்படுமென விமா னத் தாக்குதலின் பின்னர், அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகளின் நடவடிக்கைகளுக்கான பிரதிப் பணிப் பாளர் ஜெனரல் மார்க் கிம்மிற் தெரிவித் தார்.

இதேவேளை, சர்காவி கைது செய்யப் படுவதற்கு உதவியாக அவர் தொடர்பான தகவல்களைத் தருவோருக்கு, பத்து மில் லியன் அமெரிக்க டொலரிலிருந்து 25 மில்லியன் அமெரிக்க டொலர் வரை பரி சாக வழங்கப்படுமென அமெரிக்க இரா ஜாங்கச் செயலர் கொலின் பவல் நேற்று அறிவித்தார். ஒஸாமா பின்லேடனைக் காட்டித்தருபவர்களுக்கு - 27 மில்லியன் அமெரிக்க டொலர் தரப்படுமென அமெரிக்கா ஏற்கனவே அறிவித்திருந்தமையும் குறிப் பிடத்தக்கது.

## ஈரான் வலுக்கட்டாயமாகவே 8 கடற்படை வீரர்களையும் பிடித்தது

### பிரிட்டன் பாதுகாப்பு செயலகம் தெரிவிப்பு



ஈரான் கடற் பகுதிக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாகத் தெரிவித்து அண்மை யில் ஈரான் படைகளால் கைதுசெய்யப் பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்ட எட்டுப் பிரிட்டன் கடற்படையினரும், தாம் கட்டாயப்படுத்தப்பட்டே ஈரான் கடற்பகுதிக் குள் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரி வித்தனரென பிரிட்டன் பாதுகாப்புச் செய லகம் தெரிவித்துள்ளது.

ஆறு பிரிட்டன் கடற்படையினர் மற்றும் இரண்டு மாலுமிகளென எட்டுப்பேர் ஈராக் கிய கடல் எல்லைக்குள் பயிற்சி நடவடிக் கையில் ஈடுபட்டனரெனவும், எந்தக் கார ணம் கொண்டும் அவர்கள் ஈரானிய கடற் பகுதிக்குள் பிரவேசிக்கவில்லை எனவும் பாதுகாப்புச் செயலக அதிகாரி ஜோவ் கூன் தெரிவித்தார்.

பிடிக்கப்பட்ட எட்டுப் பிரிட்டன் கடற் படையினரும் கண்கள் கட்டப்பட்ட நிலை யில் வைத்திருந்தமையை நாம் ஆழமாகப் பார்க்கின்றோமெனவும் அவர் தெரிவித் தார்.

இந்த எட்டுப் பிரிட்டன் வீரர்களும் நடத் தப்பட்ட முறையானது முற்றுமுழுதாக அவமானகரமான முறையிலாகும் என அன்கிறாம் என்ற அதிகாரி தெரிவித்தார்.

# அல்கொய்டா உறுப்பினர் ஐவர் சவுதியில் சுட்டுக் கொலை



அல் - கொய்டா தீவிரவாத அமைப்பிற்கு உதவி செய்யும் அனைவருக்கும் தண்டனை வழங்கப்படும் என்ற சவுதி அரேபிய அரசு எச்சரித்துள்ளது.

இது தவிர தீவிரவாத இயக்கங்களுக்கு ஆதரவாக செயற்பட்டு வருபவர்களைக் கண்டுபிடித்துக் கைது செய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால், தீவிரவாதிகளின் தாக்குதல் சவுதியில் அதி கரித்து வருகிறது.

றியாட் நகரின் கிழக்குப் பகுதியிலுள்ள அல்குவா சில் ஒரு வீட்டில் சந்தேகத்திற்குரிய வகையில் சிலர் தங்கியிருப்பதாகச் சவுதிப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

கடந்த சில நாட்களாக அவர்ளைப் பொலிஸார் இரகசியமாகக் கண்காணித்தனர். அப்போது அவர்கள் தீவிரவாதிகள் என்பது தெரியவந்தது.

தீவிரவாதிகள் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட் களை, 3 கார்களில் கொண்டுவந்து வீட்டில் பதுக்கி வைக்கமுயன்றதை பொலிஸார் பார்த்தனர்.

இதையடுத்து, மர்மமான முறையில் - தங்கியிருந்த நபர்கள் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டுவருபவர்கள் என்பதை பொலிஸார் உறுதிப்படுத்தி அவர்கள் மீது தாக்குதலை நடத்தினார்கள்.


இரு தரப்பினருக்கும் இடையில் கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் 5 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஒரு பொலிஸ் அதிகாரியும் பலியானார். 3 பொலிஸார் காயமடைந்தனர்.

பலியான தீவிரவாதிகளில் ஒருவரின் பெயர் - அப்துல்லா முகமது ரஷீத் அல் ரசீத், இவர் அல்கொய்டா தீவிரவாதிகளுக்கு ஆதரவாக சவுதி அரேபியாவில் உள்ள இயக்கத்தின் முக்கிய தலைவர் என்பது தெரியவந்தது.

சவுதி அரேபிய அரசால் தேடப்பட்டு வந்த மிக முக்கிய தீவிரவாதி அப்துல்லாதான் இவர் மிகவும் ஆபத்தான தீவிரவாதி என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

உலக நோக்கு

# சதாம் நீதிமன்றில் ஆஜர்



(பக்தாத்)

ஈராக்கிய அரசிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்ட முன்னாள் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் உட்பட அவ ரது சகாக்கள் 11 பேரும் நேற்றையதினம் விஷேட நீதிமன்றினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கறுப்பு உடை தரித்திருந்த சதாம் ஹுசைன் சங்கிலிகளால் பிணைக்கப்பட்ட நிலையில் நீதிமன்றுக்கு அழைத்து வரப் பட்டார்.

நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட சதாம் ஹுசைன்மீது ஏழு போர்க் குற்றங்கள் தாக் கல் செய்யப்பட்டு பதிவுசெய்யப்பட்டன.

நீதிமன்றுக்கு அழைத்துவரப்பட்ட சதாம் ஹுசைனிடம் - உங்கள் பெயர் என்ன? என்று வினாவியபோது, நான் சதாம் ஹுசைன் - ஈராக்கின் ஜனாதிபதி எனத் தெரிவித்த அவர், நீங்கள் அத்துமீறல்களைப் புரிந்துள்ளீர்களா? என்று வினாவியபோது, அமெரிக்க இராணுவத்தினரை அவமானப்படுத்தும் நோக்கில் நான் அல்ல நாய்களே அத்துமீறல்களைப் புரிந்துள்ளார்கள் எனக் குறிப்பிட்டார்.

தற்பொழுது அமெரிக்க இராணுவத்தின் பதுகாப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சதாம் ஹுசைன் உட்பட அவரது சகாக்கள் அனைவரும் போர்க் கைதிகள் அல்ல என்றும், தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களை எதிர்த்து வாதாட உரிமையுண்டு எனவும் சட்டவல்லுனர்கள் தெரிவித்தனர்.

சதாம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் சதாமுக்கும் அவரது சகாக்களுக்கும் மரணதண்டனை விதிக்கப்படுவதையே ஈராக்கிய இடைக் கால அரசு விரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சதாம் ஹுசைன் மற்றும் அவரது சகாக்கள் மீதான விசாரணைகள் முடிவடைய பல மாதங்களோ வருடங்களோ ஆகலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமது உரிமைகளை வழங்கக் கோரி
# பெருமளவு ஹொங்ஹொங் மக்கள் சீன அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டம்



(ஹொங்ஹொங்)

தமது ஜனநாயக உரிமைகள் மறுக் கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, ஹொங் ஹொங் மக்கள் சீன அரசுக்கு எதிரான மாபெரும் கண்டனப் பேரணி ஒன்றினை நடத்தியுள்ளனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின்போது தமது ஜனாதிபதியை தாமே தெரிவுசெய்ய சீன அரசு அனுமதியளிக்க வேண்டும் எனக் கோரி, ஹொங்ஹொங் மக்களால் நடத் தப்பட்ட இந்தப் பேரணியில் பல இலட் சம் மக்கள் கலந்துகொண்டனர்.

இதேபோன்ற பேரணி கடந்த வருடமும் சீன அரசுக்கு எதிராக நடத்தப்பட்டவேளை, 5 இலட்சம் மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

நேற்று ஹொங்ஹொங்கின் விக்டோரி யாப் பூங்காவில் இருந்து ஆரம்பித்த இந்த எதிர்ப்புப் பேரணி தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைப்பாளர்களில் ஒருவர் - தாம் எதிர்பார்த்த அளவிலும் பார்க்க பல் லாயிரம் மடங்கு மக்கள் கலந்துகொண் டதாக தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்ட ஒருவர் கருத்துத் தெரிவிக்கை யில் - சீன அரசுக்கு எதிரான எமது அதிருப்தியை வெளிப்படுத்த விரும்புகி றோம். எமது கருத்துக்களை வெளிப்ப டுத்த எமக்கு சுதந்திரம் இல்லை. அதே நேரம் எமது கருத்துக்களை சீன அரசு ஏற்றுக் கொள்வதுமில்லை எனவும் தெரி வித்தார்.

சீனாவின் பீஜிங் நகரில் உள்ள மக்க ளுக்கு வழங்கப்படும் ஜனநாயக உரிமை கள் போன்று ஹொங்ஹொங் மக்களுக் கும் வழங்கப்படும் என சீன அரசு உறுதி யளித்த போதும், அத்தகைய உரிமைகள் தமக்கு வழங்கப்படவில்லையெனத் தாம் உணர்வதாக ஹொங்ஹொங் மக்கள் தெரி வித்தனர்.

நேற்று இடம்பெற்ற ஆர்பாட்டப் பேரணியில் கலந்துகொண்ட மக்கள், 'அதி காரத்தினை மக்களிடம் கையளி!' என் கின்ற கருத்துடைய சுலோகங்களைத் தாங்கியிருந்தனர்.

# இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் ஆந்திர மாநிலத்திற்கு விஜயம்

(புதுடெல்கி)

கடன் சுமை காரணமாக பெருமள வில் விவசாயிகள் உயிரிழந்த ஆந்திரப் பிரதேச மாநிலத்திற்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் விஜயம் செய்கின் றார்.

கடந்த ஆறு வருடங்களில் இந்த மாநிலத்தில் சுமார் மூவாயிரம் விவசா யிகள் கடன் சுமை தாங்காமல் தற் கொலை செய்து கொண்டதாக அரசாங் கம் தெரிவித்துள்ளது.

பிரதமர் மன்மோகன்சிங் தலைமை யிலான அரசாங்கம் தயாரிக்கவுள்ள வரவு செலவுத் திட்டத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் பிரதமரின் இந்த விஜயம் அமைந் துள்ளது.

காங்கிரஸ் தலைமையிலான அரசாங் கம் தயாரிக்கவுள்ள வரவு செலவுத் திட் டம் அனேகமாக விவசாயிகளுக்கு ஆதர வாகவே இருக்குமென எதிர்பார்க்கப்படு கிறது. கடந்த அரசின் பொருளாதாரத் திட்டத்திலிருந்து விவசாயிகள் புறக் கணிக்கப்பட்டிருந்ததாகவும், தற்போது பிரதமர் மன்மோகன்சிங்கின் விஜயம் காங்கிரஸ் அரசாங்கத்தின் - விவசாயிகள் மீதான அக்கறையைக் காட்டுவதாக செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

பிரதமரின் இந்த விஜயத்தின் போது இரண்டு கிராமங்களைச் சேர்ந்த மக்க ளைச் சந்தித்து கலந்துரையாடுவாரென வும், தற்கொலை புரிந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கப்படுமென அறிவிப்பாரெனவும் எதிர்பார்க்கப்படு கிறது.

பிரதமர் விஜயம் செய்யவுள்ள 'சோமயுலபலே' என்ற கிராமத்தில் மட்டும் கடந்த ஆறுவருடத்தில் 53 விவசாயிகள் கடன் தொல்லை தாங்காமல் தற்கொலை செய்துள்ளனர்.

தனியார் நிறுவனங்களிடம் வட்டியுட னான கடனை வாங்கும் விவசாயிகள் அதனைச் செலுத்த முடியாமல் தற் கொலை புரிவதாகத் தெரிவிக்கப்படு கிறது.

தற்போதைய காங்கிரஸ் அரசாங்கம் விவசாயிகளுக்கான நிவாரணத் திட்ட மொன்றை அறிவித்தும்கூட விவசாயி களின் தற்கொலை தொடர்ந்த வண்ணமே



உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவில் 1991 ஆம் ஆண்டி லிருந்து மேற்கொள்ளப்பட்டுவரும் பொரு ளாதாரச் சீர்திருத்தம் காரணமாக விவசா யிகள் பெருமளவில் துன்பமடைந்துவரு வதாக விவசாயிகள் அமைப்புத் தெரிவித் துள்ளது.

மின்சாரம், உரம் மற்றும் கடன்களுக் கான வட்டி போன்றவற்றுக்கு விவசாயி கள் பெருமளவில் பணம் செலுத்த வேண் டியுள்ளதெனவும், ஆனால் விவசாயி களின் உற்பத்திக்கான விலைகள் மெது வாகவே அதிகரித்து வருவதாகவும் அந்த விவசாய அமைப்புத் தெரிவித்தது.

விவசாயிகளுக்கான இந்த நெருக்கடி ஒரு இரவில் வந்ததல்ல. இது கடந்த பல வருடங்களாக ஏற்பட்ட ஒன்றாகும். இது விவசாயிகளுக்குச் சாதகமற்றதென வும் விவசாய அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் அங்காலாரெட்டி தெரிவித் தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இழுவைப் படகுகள் மீன் பிடிக்கு இந்த ஆண்டுடன் தடை விதிப்பு!

## கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவிப்பு

(கிளிநொச்சி)

அரசு தமது கடற்பரப்பை 500 கடல் மைல்களாக விரிவாக்கத் தீர்மானித்துள்ள நிலையில், தமிழ் மக்கள் 10 கடல் மைல் பரப்பிற்கு அப்பால் மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல சூசை தெரிவித்தார்.

புலிகளின் குரல் வானொலிக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்று சமாதானமும், தமிழ் மக்களின் பொருளாதார அபிவிருத்தியும் பெயரளவிலேயே உள்ளன. இந்தியாவில் இருந்து இங்கு வரும் இழுவைப்படகுகள் மூலம் தாயக வளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் படகுகள் தமிழர் தாயகப் பகுதிகளில் மீன் பிடிப்பதற்கு அரசு எவ்வித தடையும் விதிக்கவில்லை. தமிழ் மக்கள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்த சிங்கள அரசு அனுமதிக்கப்போவது கிடையாது.

தமிழர் தாயகக் கடற்பரப்பில் தமிழரைத் தவிர வேறு எவரும் மீன் பிடிக்கலாம் என்ற நிலை காணப்படுகின்றது. தமிழ் மக்கள் தமது கடற்பரப்பில் மீன் பிடித்தலில் ஈடுபட்டால், அவர்கள் பொருளாதார ரீதியாக முன்னேறி விடுவார்கள் என்ற கொள்கை அரசிடம் உள்ளது.

தமிழன் தமது கடற்பரப்பு ஊடாக பொருளாதாரரீதியாக மேம்பட வேண்டுமானால் தமிழனுக்கு என்று ஒரு கடற்படை உருவாக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மன்னார் பகுதியில் டைனமைற் மூலம் மீன்பிடித்தல் அதிகளவில் இடம்பெறுவதாகவும், இதனால் கடல் வளம் அழிக்கப்படுவதாகவும், கடல் வளத்தைப் பாதுகாக்கும் நோக்கில் டைனமைற் மீன்பிடித்தலைத் தடுக்கும் நடவடிக்கை கடற்புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்,

அத்துடன் கடல் வளத்தை அழிக்கும் இழுவை மீன்பிடித்தொழில் இந்த ஆண்டுடன் நிறுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இழுவை மீன்பிடியில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் மீன்பிடி முறைக்கான ஏற்பாடுகளை இந்த ஆண்டுக்குள் செய்துமுடிக்க வேண்டும் என்றும், இந்த ஆண்டுக்குள் இழுவை மீன்பிடி முற்றாக நிறுத்தப்படும் என்றும் கேணல் சூசை மேலும் தெரிவித்தார்.

## தனியார் நிர்வாகிகளுடன் புலிகள் வவுனியாவில் சந்திப்பு!

வவுனியாவில் உள்ள அனைத்துத் தனியார் கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகளுக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினருக்குமான சந்திப்பு ஒன்று நேற்று இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட அரசியற்துறைச் செயலகத்தில் நேற்று மாலை 7 மணிக்கு வவுனியா மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் த.தர்மேந்திரா தலைமையில் இடம்பெற்ற இந்தச்சந்திப்பில் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல், வவுனியா மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அலை ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது, தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகளுக்கு சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது, கருத்துத் தெரிவித்த துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் தர்மேந்திரா எக்காரணத்திற்காகவும் தனியார் கல்வி நிறுவனங்களில் இரவுநேர வகுப்புக்களை நடாத்த முடியாது எனத் தெரிவித்தார்.

மேலும், அண்மைக் காலங்களில் சில தனியார் கல்வி நிறுவனங்களில் கலாசாரத்தைச் சீரழிக்கும் தகாத நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதைத் தாம் அறிந்துள்ளதாகவும், இனிவரும் காலங்களில் இத்தகைய செயற்பாடுகள் தனியார் கல்வி நிறுவனங்களில் இடம்பெற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (03)

## கிராம அலுவலர்களுக்கு போக்குவரத்து கொடுப்பனவு 500 ரூபாவால் அதிகரிப்பு!

கிராம சேவையாளர்களுக்கான மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவு அதிகரிக்கப்படவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

கிராம சேவையாளர்களுக்கு, அவர்களது போக்குவரத்துக் கொடுப்பனவாக தற்போது மாதமொன்றுக்கு 75 ரூபாவே வழங்கப்பட்டு வருவதாகவும் அது 500 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், கிராம சேவையாளர்கள் தமது பிரதேசத்தை விட்டு வெளியிடங்களுக்கு அலுவலக நிமித்தம் சென்றால் அவர்களுக்கு மேலதிகமாக ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

அத்துடன் கிராம சேவையாளர்கள் தமது ஐந்து மாதத்திற்குரிய சம்பள நிலுவையையும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம்!

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் உள்ள கைத்தொழிற் கல்லூரியை தொழில்நுட்பக்கல்லூரியாக அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் மங்கள சமரவீர - இக்கல்லூரியில் போதிக்கப்படவுள்ள புதிய பாடத்திற்கு தென்கொரிய நாட்டின் தொழில்நுட்பத் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறப்பட்டுள்ளது.

மேலும் சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் அரச கட்டடங்கள், பாடசாலைகள், வழிபாட்டுத்தலங்கள், விளையாட்டு மைதானங்கள் உட்பட பொது இடங்களில் 12 மைக்கோலுக்குக் குறைந்த பெறுமானமுள்ள பொலித்தீன் பாவனையைத் தடைசெய்யவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### புல்மோட்டை....

கூறியபோதும், தாம் தமது உயர் அதிகாரிகளின் அனுமதியைப் பெற்றபின்பே இது குறித்து முடிவெடுக்க முடியுமெனவும் அதுவரை காத்திருக்குமாறும் படையினர் தெரிவித்து சுமார் ஒரு மணி நேரமாக போராளிகளை அங்கு காக்க வைத்தனர்.

ஒரு மணிநேர தாமதத்தின் பின்னர் பல்வேறு காரணங்களைத் தெரிவித்த படையினர்,. போராளிகள் தொடர்ந்து செல்ல அனுமதியை மறுத்துள்ளனர்.

இந்த நிலையில் தமது புல்மோட்டை விஜயத்தை இடைநிறுத்திய எழிலன் தலைமையிலான போராளிகள் குழுவினர், மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடொன்றைக் கொடுத்தனர். இந்த முறைப்பாட்டில் தாம் தடுத்து நிறுத்தப்பட்டது தொடர்பாக தீர விசாரித்து முடிவொன்றைத் தமக்கு தெரியப்படுத்த வேண்டுமென எழிலன் கேட்டுக்கொண்டார்.

இந்த முறைப்பாட்டை ஏற்ற மாவட்ட கண்காணிப்புக்குழுவினர் இது தொடர்பாக புல்மோட்டைப் பகுதியிலுள்ள இராணுவ முகாமுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர். (10)

### 17 ஆவது....

வில் இராணுவத் தலைமை அதிகாரி சூல செனவிரத்ன, பிரதித் தலைமை அதிகாரி சரத்பொன்சேகா உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

### கருணாவுக்கு....

என்பது குறித்து எமக்கு எதுவும் தெரியாது. இராணுவத்தினர் என்ற அடிப்படையில் யுத்தம் மாத்திரம் எமது கடமையல்ல. நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைப்பை வழங்குவதும் எமது கடமையாகும். மிகுந்த பொறுப்புடன் இவ்விடயத்தில் இராணுவத்தினர் செயற்பட்டுள்ளனர்.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கும், அதனைச் சாதகமாக்குவதற்கும் எமது படையினர் பலமாக இருப்பதாலேயே அது சாத்தியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சிறுவன் ஒப்படைப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் வீரமுனைப் பகுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணையச் சென்ற 16 வயதுச் சிறுவன், அவனது பெற்றோரிடம் விடுதலைப் புலிகளால் நேற்று ஒப்படைக்கப் பட்டார்.

அம்பாறை - தம்பிலுவிலில் அமைந்துள்ள மாவட்ட அரசியற்துறை நடுவப் பணியகத்தில் வைத்து மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் இந்தச் சிறுவனை கண்காணிப்புக் குழுவினரின் விடுகைப்பத்திரத்தில் கையொப்பமிட்டு பெற்றோரிடம் நேற்று நண்பகல் ஒப்படைத்தார். (07)

## எஸ்.பி.திஸநாயக்க சமர்ப்பித்த மருத்துவ சான்றிதழ் நிராகரிப்பு!

(கொழும்பு)

உயர்நீதிமன்றத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தியமை தொடர்பாக தாக்கல் செய்திருந்த வழக்கு விசாரணைக்கு ஆஜராக முடியாதிருப்பதாகத் தெரிவித்து முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க - சட்டத்தரணி மூலம் சமர்ப்பித்த வைத்திய சான்றிதழை உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க நீதிமன்றில் ஆஜராகாதுவிட்டாலும் எதிர்வரும் தவணையில் விசாரணைகளைத் தொடரப் போவதாக உயர்நீதிமன்றம் தெரிவித்தது.

எஸ்.பி.திஸநாயக்க காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளார் என்றும், அதனால் அவர் நீதிமன்றில் ஆஜராக முடியாத நிலையில் உள்ளார் என்றும் மாவனெல்ல தனியார் வைத்தியர் ஒருவர் மருத்துவச் சான்றிதழ் வழங்கியிருந்தார்.

அரசாங்க வைத்தியர் அல்லாத தனியார் வைத்தியர் சான்றிதழ் வழங்கியமை, வைத்தியசாலையில் சேர்ந்த தினம், சிகிச்சை அளிக்கப்படவேண்டிய காலஎல்லை போன்ற விடயங்களை குறிப்பிடாதமை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டே இந்த மருத்துவச் சான்றிதழை உயர்நீதிமன்றம் நிராகரித்தது.

இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. அன்றைய தினம் நீதிமன்றில் ஆஜராகுமாறு எஸ்.பி. திஸநாயக்கவுக்கு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான ஐவர் கொண்ட நீதியரசர் குழு முன் இந்த விசாரணை இடம்பெற்றது.

## மீசாலை விக்னேஸ்வர வித்தியாலய அதிபரைப் பொறுப்பேற்க விடாமல் பாடசாலை முன் நேற்று மறியல்!

(சாவகச்சேரி)

மீசாலை விக்னேஸ்வர மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக நியமிக்கப்பட்டவரை பதவியேற்கவிடாமல் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பெற்றோர் எனப் பெருமளவானோர் மறியலில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மீசாலை விக்னேஸ்வர மகா வித்தியாலயத்தில் பதில் அதிபராகக் கடமையாற்றுபவருக்குப் பதிலாக புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

புதிய அதிபர் நேற்றுக் காலை தமது கடமையைப் பொறுப்பேற்கப் பாடசாலைக்குச் சென்றபோது - வாசலில் கூடி நின்ற மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் என நூற்றுக்கணக்கானோர் மறியல் செய்தனர். பாடசாலை வாசலில் புதிய அதிபருக்கு எதிராக பதாகைகள் கட்டப்பட்டிருந்தன

பாடசாலை வாசலை மறித்து நடத்தப்பட்ட இந்தப் போரட்டத்தால் பாடசாலையின் செயற்பாடுகள் யாவும் பாதிக்கப்பட்டன. காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை போராட்டம் இடம்பெற்றது.

இதனையடுத்து தென்மராட்சிக் கோட்ட கல்விப்பணிப்பாளர் உள்ளிட்ட சம்மந்தப்பட்ட தரப்பினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பாடசாலை சமூகத்தினரிடம் பேச்சுக்களை நடத்தினர்.

எனினும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் வரை போராட்டம் தொடர்ந்து இடம்பெறும் என்று பாடசாலை சமூகத்தினர் தெரிவித்தனர். (29,34)

### வேலையற்ற.....

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

இந்த மாத இறுதிக்குள் கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சை, சாதாரணதரப்பரீட்சை என்பவற்றில் சித்தியடைந்த இளைஞர், யுவதிகளுக்கும் வேலை வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்கம் தெளிவான கொள்கைக்கு அமைய வேலைவாய்ப்பினை வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குவதில் எந்தவித சிக்கலும் ஏற்படவில்லை.

இந்தத் திட்டத்திற்குத் தேவையான 900 மில்லியன் ரூபாவை 2004 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தினூடாக வழங்கியிருக்கிறோம்.

எதிர்வரும் இரு வாரங்களில் நியமனக் கடிதங்கள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் மங்கள சமரவீர மேலும் குறிப்பிட்டார்.

## கருணாவுக்கு உதவி...

சந்திப்பின் போது மறுத்தார்.

லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொடவின் தலைமைத்துவத்தின் கீழ் இராணுவம் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மதித்து நடக்கும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்கவும், நிரந்தர சமாதானத்தைக் காணவும் அரசு உறுதியாக உள்ளது.

தற்போது நடைமுறையில் இருக்கின்ற அபிவிருத்தித் திட்டங்களை தொடர்ந்து முன்கொண்டு செல்லவும், புதிய திட்டங்களை ஆரம்பித்து வடக்கு - கிழக்கில் உள்ள மக்களது மனிதாபிமான அபிவிருத்தி வேலைப்பாடுகளை பூர்த்தி செய்யவும் அரசு ஆர்வம் கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதி சந்திரிகா நேற்று தெரிவித்தார்.

அத்துடன், யூன் மாதம் பன்னிரண்டாம் திகதி அறிவித்த சமாதானக் கட்டமைப்பை ஸ்தாபிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா நோர்வேத் தூதுக் குழுவினருக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

இந்த சந்திப்பில் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்முடன் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் மற்றும் சொல்.'.றைய்ட் லைய்ன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி சந்திரிகா, வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர், சமாதான செயலக செயலாளர் நாயகம் ஜயந்த தனபால, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எச்.எம்.ஜி.எஸ். பாலிதகார ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.